www.penakural.com மலர்: 03 இதழ்: 03 ஜனவரி 2025 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்



## எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை!

**- மரு. ராமதாஸ்**



## சிளம் செல்லுக்கு மனுவே வரக்கூடாது!:

**உதயநிதி ஸ்டாலின்**



## எச்.எம்.பி.வி. வைரஸ் பற்றி அச்சப்படத் தேவையில்லை!

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**


HAPPY
Birthday!
Happy
2nd
Birthday
to
Tamilni
Monday | January 20

பேனா குரல்
PENA KURAL தமிழ் மாத இதழ்
RNI No.: TNTAM/2022/85375
ஆண்டு: 03 இதழ்: 03 ஜனவரி 2025
விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு
வெளியிடுபவர் : N V சிவசங்கர்
ஆசிரியர் : ராதிகா.S, B.E.,
கௌரவ ஆசிரியர் : K.ராமசுப்ரமணியன்
இணை ஆசிரியர் : K.ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், வீ.அய்யனார், பி.ஸ்டாலின், P.கார்த்திகேயன், B.நாராயணசாமி

தலைமை நிருபர்கள்:
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், சரவணன் @ மணிகண்டன், L.குமரேசன், K.J.ரமேஷ், R.சஞ்சீவ் குமார்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, D.பாமா, அன்புமணி, தமிழ் வீரன், D.ராஜேஷ், S.ஜெயராஜ், ஜெபசீலன், K.மாரிதுரை

புகைப்பட நிருபர்:
V.கவியரசன்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L.,
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் வாசகங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *


ஆசிரியர் குரல்

# பயம் வேண்டாம்!

எச்.எம்.பி.வி. வைரஸ் என்ற தொற்று இப்போது எல்லா நாட்டினருக்கும் ஒரு பயம் வந்துவிட்டது. எப்படி கொரோனா சீனாவில் இருந்து தோன்றி உலகம் முழுவதையுமே உலுக்கியதோ அதுபோல இந்த எச்.எம்.பி.வி. தொற்றும் பரவி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்சத்துக்கேற்ப எச்.எம்.பி.வி. என்ற 'ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ்' என்றும், சீனா வைரஸ் என்றும் அழைக்கப்படும் இந்த தொற்று தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, மராட்டியம் போன்ற மாநிலங்களுக்குள் மெல்ல காலடி எடுத்து வைத்துவிட்டது. இந்த தொற்று பெரும்பாலும் 5 வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கும், 65 வயதுக்கு மேற்பட்ட இணை நோய் உள்ளவர்களுக்குமே பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த தொற்று மூச்சுக்குழாயில் பாதிப்பை ஏற்படுத்தும் சளி, இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு தொல்லை, தொண்டை வலி, சோர்வு போன்ற அறிகுறிகளோடு வருகிறது. இந்த தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மும்போதும், இருமும்போதும் வெளிவரும் நீர் துளிகளால்தான் மற்றவர்களுக்கு பரவுகிறது. இதுமட்டுமல்லாமல் இந்த வைரஸ் பரவியுள்ள இடங்களை தொட்டுவிட்டு, பிறகு அதே கைகளைக்கொண்டு வாய், மூக்கு, கண்களை தொடும்போது பரவ தொடங்கிவிடுகிறது. கொரோனா முதலில் ஓரிருவருக்குத்தான் வந்தது. பிறகுதான் அலை அலையாய் பரவ தொடங்கியது. அதுபோலத்தான் இந்த எச்.எம்.பி.வி. தொற்றும் தன் ஆட்டத்தை தொடங்கும் என்று டாக்டர்கள் அச்சப்படுகிறார்கள்.

இந்த தொற்றால் கொரோனா அளவுக்கு உயிர்ச்சேத பயம் வேண்டாம் என்றாலும், பாதிப்பு ஏற்பட்டால் கடும் உடல்நலக்குறைவால் 3, 4 நாட்கள் அவதிப்பட வேண்டிய நிலை ஏற்படும். இதற்கென தனி சிகிச்சை எதுவும் இல்லை. இருந்தாலும் மருத்துவ உதவி தேவைப்படும். இந்த தொற்று ஏற்பட்டு இருக்கிறதா? என்பதை செய்யும் பரிசோதனைக்கான கட்டணம் மிக அதிகமாகும். எனவே எல்லோரும் இந்த பரிசோதனையை தனியார் மருத்துவமனையில் போய் பார்க்க முடியாது. அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இந்த பரிசோதனையை நடத்தவேண்டும். இந்த எச்.எம்.பி.வி. தொற்றை கண்டு கொரோனா அளவுக்கு பயப்படவேண்டாம் என்றாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசர அவசியமாகும்.

"தனியாக இருந்தால் தானாகவே போய்விடும். அச்சப்படத் தேவையில்லை" என்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன். பொது சுகாதார இயக்குனர் டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம் கூறும்போது, "கூடுமானவரை குழந்தைகள், இணை நோய் உள்ள முதியோர், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் பொது இடங்களுக்கு செல்லும்போது கட்டாயம் முககவசம் அணிந்து செல்வது நல்லது. கொரோனா காலத்தில் பின்பற்றியது போன்று கைகளை அடிக்கடி கழுவுதல், வெளியே போய்விட்டு வந்தால் கைகளை சோப்பு போட்டு கழுவுதல் போன்றவற்றை கடைப்பிடிப்பது நல்லது" என்று அறிவுரை வழங்கியுள்ளார். மொத்தத்தில் இந்த தொற்றுக்கு பயமும் வேண்டாம், பீதியும் வேண்டாம். அதேநேரத்தில் முன்னெச்சரிக்கையாக கண்டிப்பாக இருக்கவேண்டும். – ஆசிரியர்

# உபியில் மகா கும்பமேளா தொடங்கியது
## பல லட்சம் பக்தர்கள் புனித நீராடினர்



உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் மகா கும்பமேளா 12 ஆண்டுக்குப் பிறகு நடைபெறும் இந்த விழா உலகின் மிகப்பெரிய மத திருவிழா ஆகும். பிப்ரவரி 26-ம் தேதி வரை நடைபெறும் இவ்விழாவில் இந்தியா மட்டுமல்லாது, உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 45 கோடி பேர் இதில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கங்கை, யமுனை, சரஸ்வதி நிதிகள் சங்கமிக்கும் இடத்தில் பக்தர்கள் புனித நீராட உள்ளனர். இதையடுத்து, பிரயாக்ராஜ் நகரம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யுமாறு காவல் துறைக்கு முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். இதன்படி, பிரயாக்ராஜ் நகரில் உள்ள கோயில்கள், அகாராக்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநில காவல் துறை தலைவர் (டிஜிபி) பிரசாந்த் குமார் தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜ் நகரை இணைக்கும் 7 முக்கிய வழித்தடங்களில் 102 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் வழியாக வரும் வாகனங்கள் மற்றும் தனிநபர்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

71 ஆய்வாளர்கள், 234 துணை ஆய்வாளர்கள், 645 காவலர்கள் மற்றும் 113 ஊர்க்காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக டிஜிபி பிரசாந்த் குமார் தெரிவித்தார்.

கண்காணிப்பை பலப்படுத்துவதற்காக, 5 வஜ்ரா வாகனங்கள், 10 ட்ரோன்கள் மற்றும் சதித் திட்டங்களை முறியடிக்கும் 4



குழுக்கள் 24 மணி நேரமும் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நீருக்கடியில் செயல்படும் 113 ட்ரோன்கள், 2,700 செயற்கை நுண்ணறிவு (ஏஐ) கேமராக்கள் உட்பட நவீன தொழில்நுட்பங்களும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மாநில போலீஸாருடன் தேசிய பாதுகாப்புப் படை-யினர் (என்எஸ்ஜி), தீவிரவாத தடுப்புப் படை-யினர் (ஏடிஎஸ்) உள்ளிட்டோரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனவரி 14 (மகர சங்கராந்தி), 29 (மவுனி அமாவாசை) மற்றும் பிப்ரவரி 3 (வசந்த பஞ் சமி) ஆகிய 3 தினங்கள் புனித நீராடலுக்கான சிறப்பு தினங்கள் ஆகும். இந்த நாட்களில் கூட்டும் வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடெல்லி மகா கும்பமேளாவால் உத்தர பிரதேசத்தின் பொருளாதாரம் ரூ.2 லட்சம் கோடி உயரும் என்று இந்திய வர்த்தக சம்மேளனம் கணித்துள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நாளை மகா கும்பமேளா விழா தொடங்குகிறது. இதற்காக முதல்வர் ஆதித்யநாத் தலைமை-யிலான பாஜக அரசு பல கோடி ரூபாய் செலவு செய்கிறது. உலகளவில் மிகப்பெரிய விழாவாக நடைபெறும் மகா கும்பமேளாவை காண 40 கோடிக்கும் அதிகமானவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் உ.பி.யின் பொருளாதாரம் ரூ.2 லட்சம் கோடி உயரும் என்று இந்திய வர்த்தக சம்மேளன (கான்பிடரேஷன் ஆப் ஆல் இந்தியா டிரேடர்) தலைவர் மகேந்திர குமார் கோயில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், “கடந்த 2013 கும்பமேளாவின்போது உ.பி.யின் பொருளாதாரம் ரூ.12,000 கோடி உயர்ந்தது. இது கடந்த 2019 கும்பமேளாவில் 1.20 லட்சம் கோடியானது. இந்த மகா கும்பமேளாவால் உ.பி.யின் பொருளாதாரம் ரூ.2 லட்சம் கோடியாக உயரும் வாய்ப்புகள் உள்ளன. இவற்றில், பூஜை பொருட்கள் ரூ.2,000 கோடி, மலர்கள் ரூ.800 கோடி, உணவு பொருட்கள் 4,000 கோடி, காய்கறிகள் ரூ.2,000 கோடி என மொத்தம் ரூ.25,000 கோடிக்கு வியாபாரம் இருக்கும்” என்று தெரிவித்தார்.

வேலைவாய்ப்பு பெருகும்: மேலும், கடந்த முறை கும்பமேளாவின் போது 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. எனவே, மகா கும்பமேளாவால் அதற்கும் அதிகமானோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சம்மேளனம் தெரிவித்துள்ளது. மகா கும்பமேளாவை காண வருவோருக்கு முதல் முறையாக ஹெலிகாப்டர் சேவையை உ.பி. அரசு அறிமுகப்படுத்துகிறது. குறைந்தபட்ச கட்டணம் ஒரு நபருக்கு ரூ.3,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த சேவை மூலம் மட்டும் மாநில அரசுக்கு ரூ.150 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகா கும்பமேளாவுக்கு வருபவர்களின் போக்குவரத்து, தங்குமிடம், உணவு உள்ளிட்ட செலவுகளால் உ.பி.யின் பொருளாதாரம் அதிகரிக்கும். அதன் மூலம் ஜிஎஸ்டி வரியும் மத்திய, மாநில அரசுகளுக்கு கோடிக்கணக்கில் கிடைக்கும் என்று கூறுகின்றனர்.

– நா வீ சிவசங்கர்

# அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.12.2024 அன்று கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் தயாரிக்கப்பட்ட, "அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளி விழாச் சிறப்பு மலர் 2025"-யை வெளி-யிட, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர் பாலு, கனிமொழி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கவிப்பேரரசு வைரமுத்து, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் டாக்டர் இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநி-திகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

– B.நவின்குமார்

# குற்றவாளிகளை காப்பாற்ற எந்த எல்லைக்கும் போகும் திமுக!

## அண்ணா நகர் சிறுமி வழக்கில் ஆளுங்கட்சியை விளாசிய அண்ணாமலை

சென்னை அண்ணா நகரில் சிறுமி ஒருவர் பாலியல் தாக்குதலுக்கு உள்ளான வழக்கில், ஆளும் திமுக அரசுக்கு பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக விவகாரத்தை தொடர்ந்து அண்ணா நகர் சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் ஆளும் திமுக அரசுக்கு அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார். இதுதொடர்பாக தமிழக பாஜக மாநிலத்தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், சென்னை அண்ணா நகரில், சிறுமி ஒருவர் பாலியல் தாக்குதலுக்கு உள்ளான போக்சோ வழக்கு தொடர்பாக, கடந்த 2024 செப்டம்பர் 7 அன்று, டைம்ஸ் ஆஃப் இந்தியா ஊடகம், சிறுமியின் பெற்றோர்களைக் காவல் ஆய்வாளர் தாக்கியதாகவும், அதிகாலை வரை, அவர்களை, காவல் நிலையத்தில் வைத்திருந்து துன்புறுத்தியதாகவும்,

குற்றவாளிகளை இன்னும் கைது செய்யவில்லை என்றும் செய்தி வெளியிட்டிருந்தது. கடந்த 2024 ஆகஸ்ட் 30 அன்று பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கியக் குற்றவாளியான சதீஷ் என்ற நபர், டைம்ஸ் ஆஃப் இந்தியா ஊடகம் வெளியிட்ட செய்திக்கேற்ப, தாமதமாகவே 2024ம் ஆண்டு செப்டம்பர் 12ம் தேதி கைது செய்யப்பட்டார்.

ஆனால், இந்த செய்திக்கு, மறுப்பு தெரிவித்த திமுக அரசு, கடந்த 2024ம் ஆண்டு செப்டம்பர் 13ம் அன்று வெளியிட்ட செய்தி வெளியீட்டில், 14 வயது சிறுவன் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், சிறுமியின் பெற்றோர்களைக் காவல் ஆய்வாளர் தாக்கியதாக வந்த செய்தி, விசாரணையில் பொய் என்று கண்டறியப்பட்டதாகவும் மறுப்பு வெளியிட்டது. இந்த மறுப்பு வெளியீட்டில், 2024ம் ஆண்டு செப்டம்பர் 12ம் தேதியன்று கைது செய்யப்பட்ட சதீஷ் குறித்த விவரங்கள் எதுவுமில்லை. கைது செய்யப்பட்ட 14 வயது சிறுவன் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். வழக்கு விசாரணையும், உயர்நீதிமன்றத்தால் சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டு, பின்னர் உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பெயரில் சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையில், காவல் நிலையத்தில் வழக்கு விசாரணை முறையாக



நடைபெறாமல், காலதாமதமாக்கப்பட்டது எனக் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதன் அடிப்படையில், அண்ணா நகர் காவல் ஆய்வாளர் ராஜி என்பவரும், விசாரணைக்கு இடையூறாக இருந்த அதிமுக நிர்வாகி ஒருவரும் தற்போது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முழுக்க முழுக்க அலட்சியமாகவும், வழக்கு விசாரணையைத் திசைதிருப்பும் போக்கிலும் செயல்பட்டு, டைம்ஸ் ஆஃப் இந்தியா ஊடகத்தில் வந்த செய்தி பொய் என்று செய்தி வெளியிட்ட திமுக அரசு, தற்போது என்ன பதில் கூறப் போகிறது? வழக்கு விசாரணையின் ஆரம்பத்திலேயே இந்த உண்மையை வெளிக்கொண்டு வந்த டைம்ஸ் ஆஃப் இந்தியா ஊடகவியலாளர் செல்வராஜ் அவர்களைப் பாராட்டாவிடினும், அவரை மிரட்டும் விதமாக, தொந்தரவு செய்து வருவது என்ன நியாயம்? மேலும், சிறுமியின் பெற்றோர்களைக் காவல் ஆய்வாளர் தாக்கவில்லை என்று விசாரணை நடத்தித் தெரிவித்த அதிகாரி யார்? பொய் கூறிய அவர் மீது ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை?

இந்த வழக்கிலும், கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதியன்று திமுக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் குறித்த விவரங்களை வெளியிட்டு, பின்னர் அந்த செய்திக் குறிப்பை நீக்கியது. அண்ணா நகர் சிறுமி, அண்ணா பல்கலைக்கழக மாணவி என, தொடர்ந்து, பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களில், பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்களை வெளிப்படுத்தி, குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்காக, எந்த எல்லைக்கும் செல்லத் திமுக அரசு தயாராக இருப்பதன் மர்மம் என்ன? என அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

- Ba.சரவணன்

# “சிஎம் செல்லுக்கு மனுவே வரக்கூடாது!”

## அதிகாரிகளுக்கு ‘ஆக்ஷன் கொக்கி’ போடும் உதயநிதி

பொதுவாக முதல்வர் ஆய்வுக் கூட்டம் நடத்தினால் அதிகாரிகள் தங்கள் மீது எந்தக் குறையும் வராத அளவுக்கு அனைத்தையும் ‘செட் செய்து’ வைத்துவிடுவார்கள். இதன் மூலம் பிரச்சினையின் நிஜ நிலவரம் தெரியாமல் மறைக்கப்பட்டு விடும். ஆனால் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தான் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில் அப்படியான செட்டப்ஸீன்களை எல்லாம் தவிடுபொடி ஆக்கிக் கொண்டிருக்கிறார்.




உதயநிதி ஆய்வுக்கூட்டம் நடத்தும் மாவட்டங்களுக்கு மூன்று நாட்கள் முன்னதாகவே அதிகாரிகள் குழு ஒன்று களத்தில் இறங்கி ரகசியமாக ஆய்வு நடத்துகிறது. இவர்கள் தரும் அறிக்கையை கையில் வைத்துக் கொண்டு ஆய்வுக் கூட்டத்தில் அமர்கிறார் உதயநிதி. இது தெரியாமல் அதிகாரிகள் யாராவது உண்மை நிலவரத்தை மறைத்து பதிலளித்தால், தன்னிடம் உள்ள தரவுகளை எடுத்துப் போட்டு திகைக்க வைக்கிறார் உதயநிதி.

இப்படித்தான் கடந்த 18-ம் தேதி திருப்பூர் மாவட்ட ஆய்வுக்கூட்டம் உதயநிதி தலைமையில் நடந்தது. பொங்கலூர் சிங்கனூர் பள்ளியில் காலை உணவை சமைத்துவைத்துவிட்டு சமையலர் சொந்த வேலையாக வெளியே சென்றிருக்கிறார். இதுகுறித்து துணை முதல்வரின் ஸ்பெஷல் டீம் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது.

ஆயுவுக் கூட்டத்தில் இதுகுறித்து கேள்வி எழுப்பிய உதயநிதி, “அந்த உணவின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? குழந்தைகள் சாப்பாட்டு விஷயத்தில் இப்படிச் செய்யலாமா? இது தொடர்பாக சமையலருக்கு உரிய பயிற்சி தரவில்லையா?” எனக் கேள்விகளால் துளைக்க, அதிகாரிகள் திணறிப் போனார்கள்.

அவிநாசி வட்டத்தில் பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் பெறுவது தொடர்பான மனுக்கள் அதிகமாக தள்ளுபடி ஆவது ஏன் என வருவாய்த்துறையினருக்கு கேள்வி எழுப்பினார் உதயநிதி. இதையெல்லாம் சற்றும் எதிர்பார்க்காத அதிகாரிகள் மழுப்பலாகவே பதில் சொல்ல, “இது தொடர்பாக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?” என சிடுசிடுத்தார்.

மாவட்டத்தில் கடந்த ஆண்டைக் காட்டிலும் குற்றச்சம்பவங்கள் அதிகரித்திருப்பது, பள்ளிக்கு குழந்தைகள் வருகை குறைந்திருப்பது, குழந்தை திருமணங்கள் மற்றும் போக்சோ குற்றங்கள் அதிகரிப்பு உள்ளிட்ட சமாச்சாரங்கள் தொடர்பாகவும் புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு கேள்வி எழுப்பியவர், அண்மையில் 3 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் உதட்டைப் பிதுக்கினார்.

உடுமலை ஆமந்தக்கடவு பகுதி மக்கள் குடிதண்ணீர் வசதி கேட்டு முதல்வர் தனிப்பிரிவுக்கு அனுப்பிய மனுவை கையோடு எடுத்து வந்திருந்த உதயநிதி, “இவர்கள் மனு கொடுத்து 6 மாதங்களான பிறகும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?” என சம்பந்தப்பட்ட பிடிஓ-வை கிடுக்குப்பிடி போட்டார்.

அதற்கு அவர், “சரி செய்கிறேன் சார்” என மழுப்பவே, அப்போதே ‘முதல்வன்’ பட பாணியில் மனுதாரருக்கு போன் போட்டவர், மறுமுனையில் பேசிய மனுதாரர், “இன்னும் பிரச்சினை தீரவில்லை சார்...” என்று சொன்னதை லவுட் ஸ்பீக்கரில் அனைவருக்கும் கேட்கும்படி ஒலிக்க விட்டார். இதேபோல், இன்னும் 4 பேருக்கு போன் போட்டு அவர்களையும் பேசவைத்து அதிகாரிகளை அசரவைத்தார்.

“மாவட்ட அளவில் வரும் புகார்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காத போதுதான் சிஎம் செல்லுக்கு புகார்கள் வந்து குவிகின்றன. இதனால் ஆட்சிக்கு கெட்டபெயர் ஏற்படுகிறது. இனிமேல், சிஎம் செல்லுக்கு புகார்கள் வரக்கூடாது. அப்படி வராதபடிக்கு உங்களிடம் வரும் மனுக்களுக்கு உரிய தீர்வை நீங்களே சொல்லிவிடுங்கள்” - இதுதான் திருப்பூர் ஆய்வுக் கூட்டத்தின் முடிவில் அதிகாரிகளுக்கு உதயநிதி போட்டுவிட்டுச் சென்றிருக்கும் கண்டிப்பான உத்தரவு. - K.J.ரமேஷ்




வியர்வையை மண்ணுக்கு உரமாக்கி..
வெயில் மழை பாராமல் பாடுபட்டு..
விளைத்தெடுத்த நெல்மணிகளை
புதுப்பானையில் போட்டு பொங்கலிட்டு...
பொங்கலோ பொங்கலென்று
அனைவரும் சேர்ந்து கூறிடுவோம்..

**அனைவருக்கும்
பொங்கல் தின
நல்வாழ்த்துகள்**

**ஆசிரியர் – பேனா குரல்**

# PROPSERV
Property Related Allied & Legal services

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

# குழந்தைகள் சமூக ஊடக கணக்குகளை உருவாக்க பெற்றோரின் ஒப்புதல் அவசியம்: மத்திய அரசு

18 வயதுக்கு கீழுள்ள குழந்தைகள் சமூக ஊடகங்களில் கணக்குகளை உருவாக்க பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்புதல் அவசியம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. அரசு வெளியிட்ட டிஜிட்டல் தனிநபர் தரவுகள் பாதுகாப்புச் சட்டம் 2023 வரைவு விதியில் இந்த முன்மொழிவை வைத்துள்ளது.


மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், வரைவு விதிகளை வெளியிட்டது. அதன் மீதான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பொதுமக்கள் அரசின் MyGov.in.என்ற தளத்தில் பிப்ரவரி 18, 2025-க்கு முன்பாக தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். அவை பிப்.18-க்கு பின்பு பரிசீலிக்கப்படும்.

இந்த வரைவு விதிகள் குழந்தைகள் மற்றும் குறைபாடுடைய தனிநபர்களின் தரவுகள் பாதுகாப்பு சட்டப்பூர்வமான வழிமுறைகளின் கீழ் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. தனிப்பட்ட தரவுகளை கையாளும் பொறுப்பில் உள்ள நிறுவனங்கள் சிறார்களின் தரவுகளைக் கையாள்வதற்கு முன்பாக பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

ஒப்புதலை சரிபார்க்க சம்மபந்தப்பட்டவர்கள் அரசு வழங்கியுள்ள அடையாள அட்டைகள் அல்லது டிஜிலாக்கர் போன்ற டிஜிட்டல் அடையாள டோக்கன்களைப் பயன்படுத்த வேண்டும்.

மேலும் இந்த வரைவு விதிகள், குழந்தைகளின் தரவுகளில் கவனம் செலுத்துவதோடு, மேம்பட்ட நுகர்வோர் உரிமைகளையும் உறுதி செய்கிறது. தாங்கள் குறித்த தரவுகளை நீக்கவோ அல்லது அந்த தரவுகள் ஏன் சேரிக்கப்படுகின்றன என்ற வெளிப்படையான விளக்கங்களை சம்மந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு நுகர்வோருக்கு அனுமதி அளிக்கிறது.

தரவு சேகரிப்பு வழிமுறைகளை கேள்வி கேட்பதற்கும் தரவு பயன்பாடு பற்றிய தெளிவான விளக்கம் பெறுவதற்கும் நுகர்வோர்களுக்கு உரிமையளிக்கிறது. வீதிமீறல்களுக்கு ரூ.250 கோடி அபராதம் விதிக்க வழிவகை செய்கிறது. இது தரவுகளை சேரிக்கும் நிறுவனங்களுக்கு கூடுதல் பொறுப்புக்கூறலை உறுதி செய்கிறது.



இந்த வரைவு விதிகள், இ-காமர்ஸ் நிறுவனங்கள், ஆன்லைன் கேமிங் வழங்குநர்கள், சமூக ஊடக இடையீட்டாளர்கள் போன்ற டிஜிட்டல் இடையீட்டாளர்கள் (intermediaries) குறித்து தெளிவாக வரையறுத்துள்ளது. அவைகளுக்கு தனித்தனியாக விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

வரைவு விதிகளின் படி, சமூக ஊடக தலங்கள் என்பது, தகவல்களை பகிர்தல், அவைகளை நீக்குதல் மற்றும் மாற்றியமைத்தல் போன்ற ஆன்லைன் பரிமாற்றங்களை முதன்மையாக மேற்கொள்ளும் இடையீட்டாளர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த விதிகளுக்கு உட்படுவதை கண்காணிக்க ஒரு டிஜிட்டல் தரவு வாரியத்தை நிறுவுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த அமைப்பு முழுமையான டிஜிட்டல் ஒழுங்காற்று அமைப்பாக செயல்படும்.

இந்த வாரியம் வழக்குகளை விசாரித்தல், விதிமீறல்களை விசாரிக்கும், அபராதங்களை அமல்படுத்தும், தரவு அனுமதிகளை நிர்வகிக்கும் நிறுவனங்களின் ஒப்புதல் மேலாளர்களை பதிவு செய்யும். ஒப்புதல் மேலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்து நிகர மதிப்பாக சுமார் ரூ.12 கோடியை பராமரிக்க வேண்டும்.

இந்த விரிவான நடவடிக்கைகள் தரவுகளை கையாளுபவர்கள் தொழில்நுட்ப மற்றும் நிறுவன பாதுகாப்பினை கடைபிடிப்பதை உறுதி செய்கிறது. அதேபோல், குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனங்களின் தேவையற்ற சுமைகளை தவிர்க்கும் வகையில், கல்வி நிறுவனங்கள் போன்ற குறிப்பிட்ட சூழல்களுக்கு விதிவிலக்குகளையும் வரைவு விதி உள்ளடக்கியுள்ளது.

- R.ஹரிகிருஷ்ணன்

# சாம்பியன் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட்
# சாதனை சகோதரிகள்




**சாம்பியன் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட் ..தென்காசி மாவட்டம் ரவணசமுத்திரம் சாதனை சகோதரிகள் தேர்வு...** யோகா, ரோலர் ஸ்கேட்டிங்கில் பல்வேறு சாதனைகள் செய்தும் தொடர்ந்து பல சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வரும் கடையம், இரவணசமுத்திரத்தை சேர்ந்த வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் மருத்துவ கல்லூரி மாணவி மிஸ்பா குற்றாலம் செய்யது பள்ளி மாணவி ஷாஜிதா ஆகிய சகோதரிகள் சாம்பியன் உலகசாதனை புத்தகத்திற்கு தேர்வாகி உள்ளனர்.

இதன் விபரம் வருமாறு:- தென்காசி மாவட்டம் கடையம் அடுத்த இரவணசமுத்திரம் கிராமத்தை சேர்ந்த மளிகை கடை ஊழியரான முகம்மது நஸீருதீன்-ஜலிலா தம்பதிகளின் மகள்கள் குற்றாலம் செய்யது பள்ளியில் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவி சாதனைச்சுடர் விருது பெற்ற ஷாஜிதா ஜைனப், வாசுதேவநல்லூர் எஸ்.தங்கப்பழம் இயற்கை மற்றும் யோகா மருத்துவக்கல்லூரி முதலாமாண்டு பி.என்.ஒய்.எஸ் மாணவி சிங்கப்பெண் விருது பெற்ற மிஸ்பா நூருல் ஹபிபா ஆகிய சகோதரிகள் யோகா, ரோலர் ஸ்கேட்டிங்கில் போட்டிகள் மட்டுமில்லாமல் பல சமூக விழிப்புணர்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றனர்.

பல விருதுகளையும் வாங்கி குவித்து வருகின்றனர். இவர்களுக்கு பயிற்சி ஆசிரியராக குற்றாலம் குருகண்ணன் என்பவர் இருந்து வருகிறார், இந்த அக்கா / தங்கை கல்வியுடன் இவர்களது சாதனைகள், சமூக விழிப்புணர்வு நிகழ்வுகள் அனைத்தும் அனைவராலும் பாராட்டும் விதம் அமைந்துள்ளது.

இவர்களது திறமைகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் ராஜஸ்தான் மாநிலம் ராம்ஹஞ்ச் மண்டி மாவட்டம் கோட்டாவில் உள்ள சாம்பியன் புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட் என்ற அமைப்பு சாதாரண குடும்பத்தை சார்ந்த இச்சகோதரிகளை சாதனை புத்தகத்தில் இடம் பெற தேர்வு செய்து சாம்பியன் உலக சாதனை புத்தக சான்றிதழ் வழங்க முன் வந்துள்ளது பாராட்டுக்குரியது.

- ஜெபசீலன்

# எடப்பாடி பழனிசாமியை பற்றி பேச கே.என்.நேருவுக்கு அருகதை இல்லை: எஸ்.பி.வேலுமணி




பாஜகவுக்கு அச்சப்படும் கோழை என எடப்பாடி பழனிசாமியை அமைச்சர் கே.என்.நேரு விமர்சித்த நிலையில், அதற்கு அதிமுகவின் எஸ்.பி. வேலுமணி பதிலடி அளித்துள்ளார்.

தெனாலி'யின் பயப் பட்டியலை விட பழனிசாமியின் பயப் பட்டியல் பெரியது என்றும் பாஜகவுக்கு அச்சப்படும் கோழை என்றும் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறித்து காட்டமான கருத்துகளை பதிவிட்டு பரபரப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் அமைச்சர் கே.என்.நேரு.

அதற்கு பதிலடியாக காட்டமான விமர்சன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் அதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. வேலுமணி. அதில், "அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி, மக்களின் குரலாக வீறுகொண்டு ஒலிப்பதைக்கண்டு அஞ்சி நடுங்கி, விடியா திமுக மந்திரி நேரு பெயரில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது ஸ்டாலினின் திராவிட முன்னேற்றக் கழகம்.

**"பம்மல் நேரு"**

அச்சம் என்ற சொல்லே எடப்பாடி அகராதியில் கிடையாது. "மக்களுக்காக உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவோம்" என்று எடப்பாடி சட்டப் பேரவையில் கர்ஜித்த போது, எதிர் பக்கத்தில் இருந்த ஸ்டாலின் தலைமையிலான மொத்த திமுக கூட்டமும் பயந்து நடுங்கியதை தமிழ் நாட்டு மக்கள் பார்த்த பிறகும், எங்களைப் பார்த்து பயம் என்ற சொல்லை திமுக பயன்படுத்துவது வேடிக்கையின் உச்சம்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னால், பல நூறு கோடி ரூபாய் கடன்களுக்குச் சொந்தக்காரர்களான உங்களுடைய குடும்பத்திற்கு, தற்போது அத்தனை கடனையும் அடைப்பதற்கு எங்கிருந்து பணம் வந்தது ? மீண்டும் செல்வச் சீமானாக வலம் வருவது எப்படி என்பதை "பயம்" இல்லாமல் சொல்வாரா பம்(மிய)மல் நேரு ?

உங்கள் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த, இப்போதும் அமைச்சராக இருக்கும் பழனிவேல் தியாகராஜன் ஒரு ஆடியோவில், குறுகிய காலத்தில் சுமார் 30,000 கோடி ரூபாயை

திரு. ஸ்டாலின் குடும்பத்தைச் சேர்ந்த இருவர் சுருட்டியதாகச் சொன்னாரே யார் அவர்கள் என்று "பயம்" இல்லாமல் சொல்வாரா பம்மல் நேரு?

இந்த 30,000 கோடி ரூபாய் உட்பட உங்களுடைய அனைத்து ஊழல்களும் அம்பலப்படும் என்பதால், ரெய்டுக்கும், வருமானவரித் துறைக்கும், அமலாக்கத் துறைக்கும் "பயந்து" இந்தியா கூட்டணியில் இருந்தும் கூட, பாஜகவின் தலைவர்களில் ஒருவரான மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங்கை அழைத்து கருணாநிதி நாணயத்தை வெளியிட்டு, 'சூரியன்-தாமரை' கூட்டணியை தமிழ் நாட்டு மக்களுக்கு திரையிட்டுக் காட்டியவர்களே நீங்கள் தானே!

**கொந்தளித்த எஸ்.பி. வேலுமணி!**

மதுரை மாவட்டம், மேலூரில், அரிட்டாப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் பிப்ரவரி 2024-ஆம் ஆண்டு டங்ஸ்டன் சுரங்க எல உரிமைக்காக ஒப்பந்தப் புள்ளி கோரியதில் இருந்து, 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டங்ஸ்டன் காங்க ஏலம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் வரை, அதாவது 10 மாதங்கள் நடுங்கி, ஸ்டாலினின் தலைமையிலான விடியா திமுக அரசு, எதிர்ப்பு தெரிவித்தோ, சுரங்க ஏலத்தை ரத்து செய்யக் கோரியோ ஏன் கடிதம் எழுதவில்லை என்று மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் எழுப்பிய எக்ஸ் வலைதளக் கேள்விக்கு மதுரை, மேலூர் மக்களுக்கு பயமில்லாமல் பம்மல் நேரு பதில் அளிப்பாரா?

சிறுபான்மையினரின் காவலனாக போலி வேடமிடும் விடியா திமுக அரசு எதற்காக பயந்தது போய் சென்னையில் உள்ள ழிமிகி அலுவலகத்திற்கு கூடுதலாக காவல் நிலைய அங்கீகாரம் அளித்தது? அதுமட்டுமல்லாமல், தானாக திமிஸி பதியும் அதிகாரத்தையும் அளித்தது எந்த பயத்தின் அடிப்படையில்?

பயம், பயம் என்று தெனாலி திரைப்பட வசனத்தை மேற்கோள் காட்டிய பம்மல் நேருவுக்கு, நானும் அதே மேற்கோளைத் தர விழைகிறேன்;

நீட் என்றால் பயம்! மேகதாது என்றால் பயம்! மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது கலைஞர் டி.வி-யில் ரெய்டு பயம்! குடையின் நிறத்தையே மாற்றி வெள்ளைக் குடை காட்டும் அளவுக்கு பயம்! பிரஸ் மீட் என்றால் பயம்! சட்டப் பேரவை என்றால் பயம்! நேரலை என்றால் இன்னும் பயம்! தற்போது டங்ஸ்டன் என்றால் பயம்! சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பேச எழுந்தாலே பயமோ பயம்! காற்றடித்தால் பயம் - துண்டுச் சீட்டு பறந்துவிடுமே என்பதால்!

"உங்களுக்கு அருகதை இல்லை"

அதனால்தான், 2 நாட்களில் சட்டமன்றத்தையே நடத்தும் திரு. ஸ்டாலின், எங்கள் கழகப் பொதுச் செயலாளர் 'புரட்சித் தமிழர்' அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அறிக்கைகளுக்கு நேரடியாக பதில் அளிக்காமல், தனது அடிமை மந்திரிகள் மூலம் பதில் அளிக்கிறார் என்பதை பம்மல் நேரு பயமில்லாமல் மக்களுக்கு தெளிவுபடுத்துவாரா?

திருச்சியின் தி.மு.க. தாதா தான்தான் என்று கூறும் இந்த நபரை, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு மந்திரியான அன்பில் மகேஷ் மற்றும் எம்.எல்.ஏ-க்கள் மதிக்காத நிலை தான் உள்ளது. தங்களை சம்பாதிக்கவிடாமல், தொழில் செய்யவிடாமல் செயல்படுவதாக, சொந்தக் கட்சியினரே புலம்புகிறார்கள்.

தன் மகன் அருண் நேருவை நாடாளுமன்ற உறுப்பினராகவும், மற்றும் மாப்பிளைக்கும், வாரிசுக்கும் இவர் கால் கழுவியதை சொல்லிச் சொல்லி திருச்சி உடன்பிறப்புகள் காரி துப்புகிறார்கள். தன்மான சிங்கமாக பீடு நடைபோடும் எடப்பாடி பற்றி பேசுவதற்கு, இவருக்கு எந்த அருகதையும் இல்லை.

"பயம்" மட்டுமே உருவான உண்மையான கோழை, ஸ்டாலினின் சீனியர் கொத்தடிமையாக இருந்து, மாநகராட்சி கவுன்சிலர்களின் அடிதடிகளை கட்டப் பஞ்சாயத்து செய்வதையே முழுநேர வேலையாகக் கொண்டிருக்கும் நேருவுக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி பேசுவதற்கு எள்ளளவும் அருகதை இல்லை" என விமர்சித்துள்ளார்.

\- சரவணன் @ மணிகண்டன்




# ரியல் 'சதுரங்க வேட்டை'.. பக்கா ப்ளான் போட்ருக்காங்க பாருங்க!

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் சதுரங்க வேட்டை திரைப்பட பாணியில், ரூ.9லட்சத்து 50 ஆயிரம் வாங்கிக்கொண்டு இரிடியம் என கூறி பித்தளை செம்பை வண்ணம் பூசி கொடுத்து மோசடி செய்ததாக, பாதிக்கப்பட்ட நபர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் மோசடியில் ஈடுபட்ட 2 பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை பகுதியை சேர்ந்தவர் ஜஸ்டின் ஜெயக்குமார் (வயது 56). அவருடைய நண்பரான அருண்குமார் என்பவரின் மூலமாக தேனியில் இருந்து குமார் என்ற பெயரைச் சொல்லி ஒரு நபர் தொடர்பு கொண்டு உள்ளார்.

தன்னிடம் விலை மதிக்க முடியாத இரிடியம் உள்ளதாகவும் அதனை வாங்கி வெளியில் விற்றால் ரூ.5 கோடி வரை வருமானம் பார்க்கலாம் என்றும் ஆசை வார்த்தை கூறியுள்ளார். இவர்களுக்குள் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

**இரிடியம் மோசடி:**

ஜஸ்டின் ஜெயக்குமாரை தொடர்பு கொண்ட மற்றொரு நபரான ராஜேஷ் என்பவர் உங்களிடம் இரிடியம் இருந்தால் கொண்டு வாருங்கள் ரூ.5 கோடி வரை நான் விற்பனை செய்து தருகிறேன் என்று கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து ஜஸ்டின் ஜெயக்குமார் மீண்டும் குமாரை தொடர்பு கொண்டு இரிடியம் கேட்ட ராஜேஷ் குறித்து கூறியுள்ளார். உடனடியாக

குமார் இரிடியம் வாங்குவதற்கு ரூ 10 லட்சம் கொண்டு வந்தால் வாங்கித் தருவதாக கூறியுள்ளார்.

அதற்கு ஜஸ்டின் ஜெயக்குமார் தன்னிடம் ரூ.9 லட்சம் மட்டுமே உள்ளதாகவும், தன்னுடைய நண்பரிடம் ரூ.50 ஆயிரம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து குமார் ரூ. 9 லட்சத்து 50 ஆயிரத்தை கொண்டு வரும்படியும், மீதி பணம் நானே போட்டு இரிடியத்தை வாங்கி வெளியே விற்றுக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார்.

**பணம் மோசடி:**

குமாரின் பேச்சை நம்பி ஜஸ்டின் ஜெயக்குமார் தனது நண்பர் மற்றும் குடும்பத்தினருடன் இரண்டு கார்களில் தேனி மாவட்டத்திற்கு வந்துள்ளார். ஆண்டிபட்டியை அடுத்துள்ள க.விலக்கு பகுதியில் நின்றிருந்த குமாரை சந்தித்து ரூ.9 லட்சத்து 50 ஆயிரம் பணத்தை கொடுத்துள்ளனர். அந்த பணத்தை வாங்கிக் கொண்டு இரிடியம் வாங்கி வருவதாக சென்ற குமார் சிறிது நேரத்தில் ஒரு பெட்டியுடன் வந்துள்ளார்.அதே நேரத்தில் ராஜேஷ் என்பவரும் அங்கு வந்து சேர்ந்துள்ளார்.

**போலீசாருக்கு கிடைத்த தகவல்:**

அந்த பெட்டியை திறந்து பார்த்த ராஜேஷ் இது இரிடியம் தான் என உறுதி செய்து கொண்டு, பெட்டியுடன் மதுரைக்கு வாருங்கள் எனது கம்பெனியில் வைத்து பேசி விற்பனை செய்து தருகிறேன் என்று கூறியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் மதுரையை நோக்கி புறப்பட்டனர். இதற்கிடையே இந்த இரிடியம் மோசடி குறித்து ஆண்டிப்பட்டி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. உடனடியாக வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது இரண்டு கார்களில் பெட்டியுடன் வந்த ஒரு பெண் உள்பட ஏழு பேரை பிடித்து விசாரணை செய்தபோது, அவர்கள் இரிடியம் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

**தப்பிய நபர்கள்:**

7 பேர் போலீசில் பிடிபட்டதை கண்டவுடன், பின்னால் வந்த இரண்டு கார்களில் வந்த குமார் மற்றும் ராஜேஷ் தப்பி ஓடிவிட்டனர். பிடிபட்ட 7 பேரையும் ஆண்டிப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து போலீசார் விசாரணை நடத்தினர்.அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில் நடந்த அனைத்தையும் வாக்குமூலமாக கூறினர். இதனைத் தொடர்ந்து அவர்கள் கொண்டு வந்த பெட்டியை திறந்து போலீசார் சோதனை செய்தனர். அப்போது பெட்டியை முறைப்படி திறக்காவிட்டால் உடல் வெந்துவிடும், உடல் பாகங்கள் செயலிழக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**பித்தளை செம்பு:**

இதனால் சற்றே பயந்த போலீசார் நீண்ட நேரம் ஆலோசனைக்கு பின்னர். அந்தப் பெட்டியை திறந்து பார்க்க முடிவு செய்தனர். அந்தப் பெட்டியை திறந்து பார்த்தபோது அதில் கருப்பு வண்ணம் பூசப்பட்ட ஒரு செம்பு இருந்தது. அந்த செம்பை சோதனை செய்தபோது அது சாதாரண பித்தளை செம்பு என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களிடம் இரிடியம் என்று விற்பனை செய்த குமார் மற்றும் ராஜேஷ் ஆகிய இருவரும் கூட்டு சேர்ந்து மோசடி செய்தது தெரிய வந்தது.

**போலீசார் விசாரணை:**

இதனையடுத்து தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த ஜஸ்டின் ஜெயக்குமார், முகவரி தெரியாத குமார் மற்றும் ராஜேஷ் மீது க.விலக்கு போலீசில் புகார் கொடுத்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த போலீசார் மேற்கண்ட குமார் மற்றும் ராஜேஷ் ஆகியோரை வலை வீசி தேடி வருகின்றனர். பித்தளை செம்பை வண்ணம் பூசி இரிடியம் என கூறி ரூ.9லட்சத்து 50 ஆயிரத்திற்கு விற்பனை செய்த சம்பவம் ஆண்டிப்பட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. - P.கார்த்திகேயன்

# ரூ.2.25 கோடி சாக்கு பையில் கட்டிவைத்த கோவை லாட்டரி வியாபாரி!



கோவையில் சட்டவிரோதமாக லாட்டரி விற்பனை செய்ததாக வந்த புகாரை தொடர்ந்து லாட்டரி வியாபாரி நாகராஜ் வீட்டில் போலீசார் அதிரடி சோதனை மேற்கொண்டனர். அப்போது அவரது வீட்டில் இருந்த சாக்கு மூட்டையை திறந்து பார்த்தபோது அதில் கட்டுக்கட்டாக பணம் இருப்பது தெரியவந்தது. மொத்தம் 2.25 கோடி ரொக்கத்தை கைப்பற்றிய போலீசார் நாகராஜை கைது செய்தனர். இந்த பணத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்பது தெரியாமல் அவர் சாக்குமூட்டையில் கட்டி வைத்து இருந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது.

தமிழகத்தில் லாட்டரி சீட்டு என்பது தடை செய்யப்பட்டுள்ளது. அதிர்ஷ்டத்தை நம்பி பலரும் லாட்டரி சீட்டு வாங்கி பணத்தை இழப்பதால் தான் தடை கொண்டு வரப்பட்டுள்ளது. இருப்பினும் கூட அண்டை மாநிலமான கேரளாவில் லாட்டரி விற்பனை நடைமுறையில் உள்ளது.

இதனால் தமிழகத்தை சேர்ந்த பலரும் கேரளா சென்று லாட்டரி வாங்கி பயன்படுத்துவதை வழக்கமாக வைத்துள்ளனர். குறிப்பாக கேரள எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, தென்காசி, தேனி, கோவை உள்பட அதனை சுற்றிய மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கேரளா லாட்டரி வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இதுதவிர கேரளா லாட்டரியை பலரும் வாங்கி வந்து தமிழகத்தில் சட்டவிரோதமாக விற்பனை செய்கின்றனர்.

இதனை தடுக்க போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அந்த வகையில் கோவை மாவட்டத்தில் சட்டவிரோத லாட்டரி விற்பனையை தடுக்கும் வகையில் போலீசார் அதிரடி சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி, பாலாஜி நகரின் சென்னியாண்டவர் கோவில் தெருவில் வசிக்கும் நாகராஜ் (வயது 42) என்பவர் வீட்டில் போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

நாகராஜ் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவர் தனது தாயுடன் வசித்து வருவதோடு, கேரளாவில் உள்ள லாட்டரி கடையில் கேஷியராக பணியாற்றி வருகிறார். இவர் சட்டவிரோதமாக லாட்டரி விற்பனை செய்தது தொடர்பாக ஏற்கனவே வழக்குகள் உள்ள நிலையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவரது வீட்டில் அனைத்து இடங்களிலும் போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அவரது வீட்டில் இருந்த சாக்குப்பையை போலீசார் திறந்து பார்த்தனர். அதில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது. மொத்தம் ரூ.2.25 கோடிக்கு பணம் இருப்பது தெரியவந்தது. ரொக்கப்பணத்தில் ரூ.2 லட்சம் அளவுக்கு 2 ஆயிரம் நோட்டுக்கட்டுகள் இருந்தன. அதேபோல் பழைய ரூபாய் நோட்டுகளும் இருந்தன.

இந்த பணத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்பது தெரியாமல் அவர் சாக்குமூட்டையில் கட்டி வைத்து இருந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. இந்த பணம் பற்றி அவரிடம் விசாரிக்கப்பட்டு வருகிறது. அதோடு 1,000க்கும் அதிகமான லாட்டரி டிக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதையடுத்து பணத்தை பறிமுதல் செய்த போலீசார் அவரை கைது செய்தனர்.

– M.திலிப்குமார்,

# 48-வது சென்னை புத்தக காட்சி

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் 48-வது சென்னை புத்தகக் காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கிவைத்தார். தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் (பபாசி) சார்பில் சென்னையில் ஆண்டுதோறும் சென்னை புத்தகக் காட்சி நடத்தப்படும். அந்த வகையில் 48-வது சென்னை புத்தகக் காட்சி நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் நேற்று தொடங்கியது.

தமிழக பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை மேயர் ஆர்.பிரியா ஆகியோர் முன்னிலையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கிவைத்து அரங்குகளைப் பார்வையிட்டார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவையொட்டி அரசு சார்பில் துக்கம் அனுசரிக்கப்படுவதால் தொடக்கவிழா எளிய முறையில் நடந்தது. இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, எம்எல்ஏ.க்கள் பரந்தாமன், சிவிஎம்பி எழிலரசன், ஏஎம்வி பிரபாகர் ராஜா, துணைமேயர் மகேஷ்குமார், பொது நூலகத் துறை இயக்குநர் பொ.சங்கர், பபாசி துணைத்தலைவர் சேது சொக்கலிங்கம், செயலாளர் எஸ்.கே.முருகன், பொருளாளர் டபிள்யூ.ஜெ.சுரேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

புத்தகக் காட்சியில் 900-க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெற்றுள்ளன. அனைத்து அரங்குகளிலும் புத்தகங்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கூடுதல் தள்ளுபடி உண்டு. விடுமுறை நாட்களில் காலை 11 மணி முதல் இரவு 8.30 மணி வரையும், வேலைநாட்களில் பிற்பகல் 2 முதல் இரவு 8.30 மணி வரையும் புத்தகக் காட்சியை பார்வையிடலாம்.

நுழைவு கட்டணம் ரூ.10. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அனுமதி இலவசம். புத்தகக் காட்சியையொட்டி பள்ளி மாணவர்களுக்கு ஜன.7-ம்



தேதி காலை 8.30 மணிக்கு ஓவியப் போட்டியும், 8-ம் தேதி காலை 8 மணிக்கு பேச்சுப் போட்டியும் நடத்தப்படுகிறது. ஜன.12-ம் தேதி நடைபெறும் நிறைவுநாள் நிகழ்ச்சியில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன் கலந்துகொள்கிறார்.

சுயஉதவிக் குழு கண்காட்சி: முன்னதாக, புத்தகக் கண்காட்சி அரங்கம் அருகே மத்திய ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் மாநில அளவிலான மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனையை (சரஸ் மேளா) துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கிவைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண் இயக்குநர் திவ்யதர்ஷினி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த கண்காட்சியில் 100-க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கேரளா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், குஜராத் உள்பட பல்வேறு மாநிலங்களின் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் தயாரிப்புகள் (வீட்டு உபயோக பொருட்கள்) இடம்பெற்றுள்ளன. ஜன.9-ம் தேதி வரை நடைபெறும் இக்கண்காட்சியை தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை பார்வையிடலாம்.

– நா.வீ.சிவசங்கர்




# விடுதலை 2 விமர்சனம்

இயக்குனர் வெற்றிமாறன் இயக்கத்தில் ஒரு படம் வெளியாகிறது என்றால், மக்களிடம் பெரிதும் எதிர்பார்ப்பு இருக்கும். சமூக அக்கறை மற்றும் சமூகத்திற்கு தேவையான கருத்துக்களை அழுத்தமாக பேசி வருகிறார் வெற்றிமாறன்.

இவர் இயக்கத்தில் சூரி, விஜய் சேதுபதி, மஞ்சு வாரியர் மற்றும் பலர் நடித்து உருவாகியுள்ள விடுதலை 2 திரைப்படம்

வாத்தியார் (விஜய் சேதுபதி) கைது செய்யப்பட்டு போலீஸ் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறார். கவுதம் மேனன் இதை மேல் அதிகாரிகளிடம் கூற, அனைவரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

விசாரணை நடந்து வரும் நிலையில், தமிழக தலைமை செயலாளர் இருக்கும் ராஜீவ் மேனன் உத்தரவின்படி, விஜய் சேதுபதியை வேறொரு இடத்திற்கு கொண்டு செல்கின்றனர். விஜய் சேதுபதியை அழைத்து செல்லும் ஜீப் டிரைவராக சூரி இருக்கிறார். இந்த பயணத்தில் ஒரு கட்டத்தில் காட்டுக்குள் இவர்கள் சிக்கிக்கொள்ள எந்த பக்கம் போவது என்று தெரியாமல் இருக்கிறார்கள்.

இந்த சமயத்தில் வாத்தியார் விஜய் சேதுபதி, தன்னுடைய முன் கதையை சொல்ல துவங்குகிறார். தனது கிராமத்து எதிராக, தலைமுறை தலைமுறையாக நடந்து வரும் கொடுமை, இனி அடுத்த தலைமுறைக்கு நடக்க கூடாது என்பதற்காக, கருப்பன் (கென் கருணாஸ்) ஒரு கொலை செய்கிறார்.

இதை அறிந்த விஜய் சேதுபதி, அவரை பண்ணை வீட்டாளர்களிடம் இருந்தும், போலீ-சிடம் இருந்து காப்பாற்ற, ஒரு இடத்தில் மறைத்து வைக்கிறார். கருப்பனுக்கு எந்த ஒரு ஆபத்தும் வராது என போலீஸ் சொல்ல, அவரை போலீசில் சரணடைய வைக்கிறார் விஜய் சேதுபதி. ஆனால், போலீஸ் துரோகம் செய்ய, கருப்பன் மற்றும் அவரது மனைவியை பண்ணை வீட்டாளர்கள் கொலை செய்கிறார்கள்.

இதில் விஜய் சேதுபதிக்கு உயிர் போகும் நிலைமை ஏற்படுகிறது. விஜய் சேதுபதியை கம்யூனிஸ்ட்டான கிஷோர் காப்பாற்றுகிறார். இதன்பின் கிஷோர் உடன் இணைந்து மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை தட்டிக் கேட்கிறார் விஜய் சேதுபதி. ஒடுக்குமுறை, தீண்டாமை என, இதுபோல் பல விஷயங்களை வைத்து மக்களை அடிமைப்படுத்தி வருபவர்களுக்கு எதிராக போராடும் விஜய் சேதுபதி, அதே சிந்தனையை கொண்டுள்ள மஞ்சு வாரியரை சந்தித்து, காதலிக்கவும் துவங்குகிறார். இருவருக்கும் திருமணமும் நடக்கிறது.

தனக்கு உயிர் கொடுத்த கிஷோரை தனது உயிராக விஜய் சேதுபதி பார்க்கிறார். ஒரு கட்டத்தில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை வன்முறையாலும் தட்டிக் கேட்கலாம் என முடிவு செய்யும் விஜய் சேதுபதி, கிஷோரிடம் இருந்து வெளியேறுகிறார். விஜய் சேதுபதி வெளியேறிய சமயத்தில், கிஷோர் கொலை செய்யப்படுகிறார். தனது உயிரை நினைத்த ஒருவரை கொலை செய்தவர்களை பழி வாங்குகிறார் விஜய் சேதுபதி.

தனது கதையை சொல்லி முடித்த விஜய் சேதுபதி, பாலத்திற்கு வெடி வைத்தது எப்படி, அதனால் பல மக்களின் உயிர்களை போக காரணம் யார் என்பதையும் போலீசிடம் கூற, வாத்தியார் மீது உள்ள போலீசின் பார்வை மாறுகிறது. இந்த



சமயத்தில் விஜய் சேதுபதியை காப்பாற்ற அவருடன் தோழர்கள் அங்கு வந்துவிடுகிறார்கள். இதன்பின் என்ன நடந்தது என்பதே படத்தின் மீதி கதை.

**படத்தை பற்றிய அலசல்**

இயக்குனர் வெற்றிமாறன் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் சிறப்பாக செதுக்கியுள்ளார். முதல் பாகத்தில் இடையிலேயே சென்ற தமிழ் என்கிற கதாபாத்திரம், இரண்டாம் பாகத்தில் என்ட்ரி கொடுத்து அனைவர்க்கும் ஷாக் கொடுத்தது திரைக்கதையின் திருப்புமுனை.

முதல் பாகத்தில் இந்த கதையை சூரி சுமந்து சென்ற நிலையில், இரண்டாம் பாகம் முழுக்க முழுக்க விஜய் சேதுபதியின் கதாபாத்திரத்துடன் பயணிக்க வைக்கிறார் வெற்றிமாறன். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக அதிகாரம் என்னென்னவெல்லாம் செய்யும், தனக்கு அதிகாரம் கிடைக்கும் போது ஒரு மனிதம் எப்படி மாறுவான் என்பதை அழகாக காட்டியுள்ளார்.

போலீஸ் அதிகாரத்தின் கட்டளைக்கு கீழ் வேலை செய்கிறார்களா? அல்லது மக்களுக்காக வேலை செய்கிறார்களா என கேள்வி எழுந்த நிலையில், சூரி கதாபாத்திரம் எடுத்த முடிவு அருமையாக இருந்தது. கென் கருணாஸ் சில நிமிடங்கள் படத்தில் வந்தாலும் கூட, வாத்தியாரின் பாதைக்கு கென் கருணாஸின் வாழ்க்கை துவக்க புள்ளியாக அமைகிறது.

அதே போல் விஜய் சேதுபதியை வழிநடத்திய கிஷோர், மனைவியாக தோளோடு தோள் நின்ற மஞ்சு வாரியர், உடனிருந்த டி.ஏ, தத்துவத்தை பின்பற்றிய தோழர்கள் என திரைக்கதையில் புரட்சியின் வெளிப்பாடாக இருந்தது. ஆனால், விஜய் சேதுபதியின் பிளாஷ் பேக் போஷனின் சில குழப்பங்கள். அதை புரியும்படி எடுத்திருக்கலாம். மற்றபடி அனைவரும் திரைக்கதையுடன் ஒன்றி போகிறார்கள்.

திரைக்கதை, வசனம், இயக்கம் என வெற்றிமாறன் அசத்தியுள்ளார். மக்களுக்காக போராடிய, ஆனால் மக்களுக்கே தெரியாமல் உயிர் நீத்த தலைவர்களை பற்றி விடுதலை 2 படத்தில், இயக்குனர் வெற்றிமாறன் அழுத்தமான கருத்தை பதிவு செய்துள்ளார். அது மிகப்பெரிய தாக்கத்தை படம் பார்த்து முடித்தவுடன் ஏற்படுத்துகிறது.

இசைஞானி இளையராஜாவின் பாடல்கள், பின்னணி இசை படத்திற்கு பலம். வேல்ராஜ் ஒளிப்பதிவு வேற லெவல். எடிட்டிங் சிறப்பு. ஆனால் டப்பிங் சில இடங்களில் சொதப்பிவிட்டது. கதாபாத்திரங்கள் லிப் சின்க், வசனங்களுடன் சில இடங்களில் ஒத்துப்போகவில்லை.

பிளஸ் பாயிண்ட்: வெற்றிமாறன் இயக்கம், வசனங்கள், நடிகர்கள், நடிகைகள் நடிப்பு, பின்னணி இசை, பாடல்கள், ஒளிப்பதிவு, அழுத்தமான கருத்துக்கள்

மைனஸ் பாயிண்ட்: இடைவேளைக்கு பின் திரைக்கதையில் ஏற்பட்ட சில குழப்பங்கள்

மொத்தத்தில், மக்களுக்காக போராடிய தலைவர்களின் வலியையும், அவர்களின் தத்துவத்தையும் பேசியுள்ள வெற்றிமாறனின் விடுதலை 2 படம், அவருடைய மகுடத்தில் சூட்டப்பட்டுள்ள மற்றொரு வாகை மலர்.

– R.சஞ்சீவ்குமார்

# டிஜிட்டல் தனிப்பட்ட தரவு
# பாதுகாப்பு வரைவு விதிகள்

டிஜிட்டல் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு வரைவு விதிகள் மக்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாக்கும் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த விதிகள் டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2023 (DPDP சட்டம்), டிஜிட்டல் தனிநபர் தரவைப் பாதுகாப்பதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப செயல்பட முயல்கின்றன.




எளிமை மற்றும் தெளிவுடன் வடிவமைக்கப்பட்ட, வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பொருளாதாரத்தில் மக்களை மேம்படுத்தும் வகையில் விதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை, டிபிடிபி சட்டத்தின்படி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க முற்படுகிறது. அதே நேரத்தில் ஒழுங்குமுறை மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு இடையே சரியான சமநிலையைக் கொண்டு வருகிறது. இதனால் இந்தியாவின் வளர்ந்து வரும் கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பின் நன்மைகள் அனைத்து மக்களுக்கும் இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கும் கிடைக்கும். தரவுகளின் அங்கீகரிக்கப்படாத வணிகப் பயன்பாடு, டிஜிட்டல் தீங்குகள் மற்றும் தனிப்பட்ட தரவு மீறல்கள் போன்ற குறிப்பிட்ட சவால்களையும் அவை எதிர்கொள்கின்றன.

### முக்கிய அம்சங்கள்

தரவு பாதுகாப்பு கட்டமைப்பின் மையத்தில் மக்களை விதிகள் வைக்கின்றன. தனிப்பட்ட தரவு எவ்வாறு செயலாக்கப்படுகிறது என்பது பற்றிய தெளிவான மற்றும் அணுகக்கூடிய தகவலை தரவு நம்பிக்கையாளர்கள் வழங்க வேண்டும், இது தகவலறிந்த ஒப்புதலை செயல்படுத்துகிறது. மக்கள் தங்கள் தரவை நிர்வகிப்பதற்கான உரிமைகள், தரவு அழிப்பைக் கோருதல், பயனர்-நட்பு வழிமுறைகளை அணுகுதல் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர்.

விதிகள் மக்களுக்கு அவர்களின் தரவுகளின் மீது அதிக கட்டுப்பாட்டைக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன. தகவலறிந்த ஒப்புதல், அழிக்கும் உரிமை மற்றும் குறைகளைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் டிஜிட்டல் தளங்களில் நம்பிக்கையை மேம்படுத்துகின்றன. பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் குழந்தைகளுக்கு புதுமை மற்றும் ஒழுங்குமுறைக்கு இடையில் சமநிலையை உறுதிசெய்ய அதிகாரம் பெற்றுள்ளனர்

### புதுமை மற்றும் ஒழுங்குமுறைக்கு இடையிலான சமநிலை

இந்தியாவின் மாதிரியானது தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பதற்கான புதுமை மற்றும் ஒழுங்குமுறைகளை வளர்ப்பதற்கு இடையே ஒரு தனித்துவமான சமநிலையை ஏற்படுத்துகிறது. கட்டுப்படுத்தப்பட்ட உலகளாவிய கட்டமைப்பைப் போல இல்லாமல், இந்த விதிகள் மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் அதே வேளையில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. பங்குதாரர்கள் தரவு நிர்வாகத்திற்கான புதிய உலகளாவிய முன்மாதிரியாக இதைப் பார்க்கின்றனர்.

கட்டமைப்பானது, சிறு வணிகங்கள் மற்றும் ஸ்டார்ட் அப்களுக்கான குறைவான இணக்கச் சுமையைக் கருதுகிறது. புதிய சட்டத்திற்கு இணங்க அனைத்து பங்குதாரர்களும், சிறிய நிறுவனங்கள்

முதல் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் வரை சுமூகமாக மாறுவதற்கு போதுமான கால அவகாசம் வழங்கப்படும்.

### டிஜிட்டல்-முதல் அணுகுமுறை

விதிகள் "டிஜிட்டல் பை டிசைன்" தத்துவத்தை தழுவுகின்றன. ஒப்புதல் வழிமுறைகள், குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் தரவுப் பாதுகாப்பு வாரியத்தின் செயல்பாடுகள் அனைத்தும் "பிறந்த டிஜிட்டல்" என்று கருதப்பட்டு, எளிதாக வாழ்வதற்கும் வணிகம் செய்வதற்கும் எளிதாக இருக்கும். இந்த வாரியம் டிஜிட்டல் அலுவலகமாக செயல்படும், டிஜிட்டல் தளம் மற்றும் செயலியுடன் குடிமக்கள் அதை டிஜிட்டல் முறையில் அணுகவும், அவர்களின் இருப்பு தேவையில்லாமல் அவர்களின் புகார்களை தீர்ப்பதற்கும் உதவும்.

புகார்களைச் செயலாக்குவது முதல் தரவு நம்பிக்கையாளர்களுடன் தொடர்புகொள்வது வரை, வேகம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த பணிப்பாய்வுகள் உகந்ததாக இருக்கும். இது இந்தியாவின் முன்னோக்கு அணுகுமுறையை ஆளுகைக்கு பிரதிபலிக்கிறது. மேலும், மக்கள் மற்றும் தரவு நம்பிக்கையாளர்களிடையே நம்பிக்கையை உருவாக்குகிறது.

### பங்குதாரர்களின் கவலைகளை நிவர்த்தி செய்தல்

வணிகங்கள் ஒரு நடைமுறை கட்டமைப்பிலிருந்து பயனடைகின்றன. தரப்படுத்தப்பட்ட பொறுப்புகள் குறைந்த இணக்கச் சுமை கொண்ட ஸ்டார்ட்அப்கள் மற்றும் எம்எஸ்எம்இ-க்களுக்கு வழங்குகின்றன, அதே சமயம் குறிப்பிடத்தக்க தரவு நம்பிக்கையாளர்களுக்கு அதிக பொறுப்புகள் உள்ளன. துறை சார்ந்த தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள், சட்டம் மற்றும் விதிகளால் உருவாக்கப்பட்ட முக்கிய தனிப்பட்ட தரவு பாதுகாப்பு கட்டமைப்பை பூர்த்தி செய்ய முடியும்.

தரவுப் பாதுகாப்பு வாரியத்தின் டிஜிட்டல் அலுவலக அணுகுமுறை புகார்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான தீர்வை உறுதி செய்யும். தவறுகளுக்கு அபராதம் விதிக்கும் போது, இயல்பு மற்றும் ஈர்ப்பு, தாக்கத்தை குறைப்பதற்கான முயற்சிகள் போன்ற காரணிகளை வாரியம் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், தரவு நம்பிக்கையாளர்கள் தானாக முன்வந்து நடவடிக்கைகளின் எந்த கட்டத்திலும் உறுதிமொழிகளை வழங்கலாம், இது வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது கைவிடப்படும். இது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை சமநிலைப்படுத்துகிறது, அதே சமயம் தனிப்பட்ட தரவைச் செயலாக்குபவர்களுக்கு நியாயமான தீர்ப்புக் கட்டமைப்பை வழங்குகிறது.

குறிப்பிடத்தக்க தரவு நம்பிக்கையாளர்களுக்கான வருடாந்திர தரவு, பாதுகாப்பு தாக்க மதிப்பீடுகள் மற்றும் தணிக்கைகளுக்கான ஏற்பாடுகள் பாதுகாப்பான இணக்கத்திற்கான பயனுள்ள ஏற்பாடுகளை உறுதி செய்கின்றன.

### உள்ளடக்கிய அணுகுமுறை

வரைவு விதிகள் பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பரந்த அளவிலான உள்ளீடுகள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவை டிபிடிபி சட்டத்தில் பொதிந்துள்ள கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், சட்டம் இயற்றுவதில் உள்ளடங்கிய அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்ற அரசின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, விஹ்நிஷீஸ் தளம் மூலம் 18.02.2025 வரை பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து கருத்து/ஆலோசனைகளை வரவேற்கிறது.

### விழிப்புணர்வு முயற்சிகள்


மக்கள் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு விரிவான விழிப்புணர்வு பிரச்சாரத்துக்கு அரசு திட்டமிட்டுள்ளது. இந்த முன்முயற்சிகள் புதிய கட்டமைப்பின் கீழ் குடிமக்களுக்கு அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி கல்வி கற்பிக்கும், தரவு பொறுப்பு கலாச்சாரத்தை வளர்க்கும்.

இந்த விதிகள் மூலம், சமமான டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இந்தியா தலைமைத்துவத்தை வெளிப்படுத்துகிறது. புதுமை உந்துதல் மற்றும் உள்ளடக்கிய மக்களின் டிஜிட்டல் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு இந்த வரைவு விதிகள் சான்றாகும்.

– P.ஸ்டாலின்

# லஞ்சம் வாங்கி சொத்து சேர்க்கும் அரசு ஊழியர்களுக்கு பெரிய சிக்கல்!

லஞ்சம் வாங்கி சொத்து சேர்க்கும் அரசு ஊழியர்கள் எளிதாக தப்பித்துவிட முடியாது. அரசு ஊழியர்கள் வாங்கும் சொத்துக்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டிய நிலைமை வந்துள்ளது. ஏனெனில் அரசு ஊழியர்கள் தொடர்பான வழக்கில் முக்கியமான உத்தரவை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. அதன்படி அரசு ஊழியர்களின் சொத்து விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டப்படி வெளியிடலாம்.



தகவல் அறியும் உரிமை சட்டப்படி அரசு ஊழியர்களின் சொத்து விவரங்களை யாரும் அறிய முடியும் என்கிற நிலை வரப்போகிறது. ஏனெனில் லஞ்சம் வாங்கியும், ஊழல் செய்தும் சொத்து சேர்க்கும் அரசு ஊழியர்கள் குறித்து சந்தேகப்படும் எவரும் அரசு ஊழியர்களின் சொத்து விவரங்களை தகவல் அறியும் உரிமை சட்டப்படி இனி அறிய முடியும். கிருஷ்ணகிரி மாவட்டம், காவிரிப்பட்டினத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் முக்கியமான தீர்ப்பினை பிறப்பித்துள்ளது.

காவிரிப்பட்டினம் சீனிவாசன் தாக்கல் செய்த மனுவில், "நான் திராவிடர் கழகத்தில் இணைந்து சமூக சேவைகளை செய்து வருகிறேன். கிருஷ்ணகிரி மாவட்ட நீர்வளத்துறை உதவி பொறியாளர் காளிபிரியன் என்பவரது சொத்துகள், கடன்கள் உள்ளிட்ட விவரங்களை அறிய விரும்பினேன். அதற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தேன்.

ஆனால், சொத்து, கடன் உள்ளிட்டவை அரசு ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்கள் என்று கூறி அதை தர மறுத்து பொது தகவல் அலுவலர் உத்தரவிட்டார். இதை எதிர்த்து மாநில தகவல் ஆணையரிடம் மேல்முறையீடு செய்தும் பலன் இல்லை. எனவே, உதவி பொறியாளரின் சொத்து, கடன் உள்ளிட்ட விவரங்களை வழங்க உத்தரவிட வேண்டும்".. இவ்வாறு சீனிவாசன் தனது மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சி.வி.கார்த்திகேயன் பிறப்பித்த உத்தரவில் கூறுகையில். உதவி பொறியாளர் காளிபிரியன் பணியில் சேர்ந்த தேதி முதல் 2023-ம் ஆண்டு ஜனவரி 31-ந்தேதி வரையிலான பணியின் விவரம், அவரது பெயரிலும், அவரது குடும்பத்தினர் பெயரிலும் உள்ள அசையும், அசையா சொத்து, அவர் பெற்றுள்ள கடன், ஊதியம் உள்ளிட்ட விவரங்களை மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கேட்டிருக்கிறார்.



ஆனால், அரசு ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்களை வழங்க முடியாது என்று அதிகாரிகள் பதில் அளித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உதவி பொறியாளர் காளிபிரியனிடம் இதுகுறித்து நீர்வளத்துறை பொது தகவல் அலுவலர் கடந்த ஏப்ரல் 4-ந்தேதி விவரம் கேட்டிருக்கிறார். அதற்கு அவர், தன்னுடைய விவரங்களை வழங்கக்கூடாது என்று மே 10-ந்தேதி பதில் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

ஆனால், மனுதாரர் கேட்டுள்ள சில விவரங்கள் உதவி பொறியாளரின் தனிப்பட்ட விவரம் என்றாலும், பொது ஊழியரின் சொத்துகள் உள்ளிட்ட விவரங்களை பொதுமக்களின் ஆய்வுக்கு உட்படுத்துவதை தடுக்க முடியாது. அதேநேரம், அதில் சில கட்டுப்பாடுகளும் உள்ளன. அதாவது பணியில் சேர்ந்த நாள், பணியின் விவரம், பதவி உயர்வு உள்ளிட்ட தகவலை வழங்குவதால் பொதுஊழியரின் பணிக்கு தீங்கு ஏற்படாத வண்ணம் இருக்க வேண்டும். எனவே, பணி பதிவேட்டில் உள்ள விவரங்கள் எதற்காக கேட்கப்படுகிறது? என்பதையும் சம்பந்தப்பட்ட பொது தகவல் அலுவலர்கள் பரிசீலிக்க வேண்டும். அதேநேரம், அரசு ஊழியர்களின் விவரங்களை வழங்க முடியாது என்று கூறக்கூடாது. ஒரு வேளை தர மறுத்தால், அதற்கான காரணங்களை கூற வேண்டும்.

இந்த வழக்கை பொறுத்தவரை, உதவி பொறியாளரின் தனிப்பட்ட விவரம் என்பதால், அதை தர முடியாது என்று பொது தகவல் அலுவலர் கூறியிருப்பதை ஏற்க முடியவில்லை. அரசு ஊழியர் பணி பதிவேட்டில் உள்ள பணியில் சேர்ந்த நாள், பணியிட மாற்றம், ஊதி உயர்வு, பணியில் ஏதாவது தண்டனை பெற்று இருந்தால் அதன் விவரம், ஓய்வு பெறும் நாள் ஆகியவை தனிப்பட்ட விவரம் கிடையாது. அதுமட்டுமல்ல அரசு ஊழியர்களின் சொத்துகள் மற்றும் கடன் விவரங்களும் அரசு ஊழியரின் தனிப்பட்ட விவரம் இல்லை.

ஒருவர் அரசு பணியில் சேர்ந்து பொது ஊழியராகி விட்டால், அவர் பொதுமக்களின் கண்காணிப்பில் உள்ளார் என்பதை ஏற்க வேண்டும். தங்களது விவரங்களை பொதுமக்கள் தெரிந்துக் கொள்ளக்கூடாது என்று நினைக்கக்கூடாது. மனுதாரர் கேட்ட விவரங்களை தர மறுத்த கிருஷ்ணகிரி பொது தகவல் அதிகாரியின் உத்தரவை ரத்து செய்கிறேன். மனுதாரரின் விண்ணப்பத்தை மீண்டும் அவர் பரிசீலிக்க வேண்டும். மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவை மாநில தகவல் ஆணையர் 2 மாதங்களுக்குள் பரிசீலித்து தகுந்த உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

இந்த தீர்ப்பின் முக்கிய அம்சங்கள் என்ன என்றால் ஒருவர் அரசு பணியில் சேர்ந்து பொது ஊழியராகி விட்டால், அவர் பொதுமக்களின் கண்காணிப்பில் உள்ளார் என்பதை ஏற்க வேண்டும். அடுத்ததாக அரசு ஊழியர்கள் தங்களது விவரங்களை பொதுமக்கள் தெரிந்துக் கொள்ளக்கூடாது என்று நினைக்கக்கூடாது என்பது தான். இந்த தீர்ப்பின் படி பார்த்தால், இனி அரசு ஊழியர்களின் சொத்து விவரங்களை யாரும் அறிந்து கொள்ள முடியும். அவர்கள் முறைகேடாக சொத்து சேர்த்தார்களா என்பதை எளிதாக கண்டுபிடிக்கவும் முடியும்.

- D.ராஜேஷ்

# பெருங்குடி குப்பை எரிஉலை திட்டத்தைக் கைவிடாவிட்டால் போராட்டம்

## அன்புமணி ராமதாஸ் எச்சரிக்கை




பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னை பெருங்குடியில் உள்ள குப்பைக் கிடங்கில் குப்பையை எரித்து மின்சாரம் தயாரிக்கும் எரிஉலை அமைக்க முடிவு செய்திருக்கும் சென்னை மாநகராட்சி, அதற்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அருகில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கும், அப்பகுதியில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கும் பெரும் தீங்கை ஏற்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த தி.மு.க. அரசு துடிப்பது கண்டிக்கத்தக்கது.

பெருங்குடியில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு மிக அருகில் 150 ஏக்கர் பரப்பளவில் குப்பை எரி உலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், இராம்சர் தலம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் சூழலியல் மிகக் கடுமையாக பாதிக்கப்படும். சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் பெய்யும் அளவுக்கு அதிகமான மழை நீரை உறிஞ்சி வெள்ளம் ஏற்படாமல் தடுக்கும் பணியை பள்ளிக்கரணை சதுப்பு நிலம்தான் செய்கிறது. யுரேஷியா கழுகு ஆந்தை, கோனமூக்கு உள்ளான், தட்டைவாயன் வாத்து, நாமத்தலை வாத்து, ஊசிவால் வாத்து, கரண்டி வாயன், நீலத்தாழைக் கோழி, நைட் ஹெரான், நீர்க்காகம், நாமக்கோழி, மஞ்சள் குருகு, நெடுங்கால் உள்ளான் உள்ளிட்ட 115 வகையான பறவைகள், 10 வகையான பாலூட்டிகள், 9 ஊர்வன வகைகள், 46 வகை மீன்கள், 5 வகையான ஒட்டு மீன்கள், 9 வகையான மெல்லுடலிகள் போன்றவற்றின் வாழிடமாக பள்ளிக்கரணை சதுப்பு நிலம் திகழ்கிறது. அதை ஒட்டிய பகுதிகளில் குப்பை எரி உலை அமைக்கப்பட்டால் அது பள்ளிக்கரணை

சதுப்பு நிலத்திற்கு மட்டுமின்றி, அங்கு வாழும் அரிய உயிரினங்களுக்கும் எல்லையில்லாத பாதிப்புகளை ஏற்படுத்தி விடும்.

பள்ளிக்கரணைக்கு அப்பால் வேளச்சேரி, மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, பள்ளிக்கரணை, துரைப்பாக்கம், மேடவாக்கம், பெருங்குடி, தரமணி உள்ளிட்ட பகுதிகளும் கடுமையான பாதிப்புகளை எதிர்கொள்ளும். எரி உலையில் பிளாஸ்டிக் உள்ளிட்ட அனைத்து குப்பைகளும் ஒன்றாக எரிக்கப்படும். டையாக்சின், சல்பர் டையாக்சைடு, கார்பன் மோனாக்சைடு, நைட்ரஜன் டையாக்சைடு, பாதரசம், கரியமில வாயு, டையாக்சைடு மற்றும் பியூரன் உள்ளிட்டவை வெளியாகும். காற்றில் மிதக்கும் துகள்கள், ஆவியாகும் கரிமச் சேர்மங்கள் ஆகியவையும் வெளியாகும். இவற்றில் பல ரசாயனங்கள் சுற்றுச்சூழலில் அழியாமல் நிலைத்திருக்கக் கூடியவை, நச்சுத்தன்மை வாய்ந்தவை, உயிரினங்களுக்குள் நிலைத்திருக்கக் கூடியவை.

இந்த நச்சு ரசாயனங்களால் புற்றுநோய், இருதய நோய்கள், மூச்சுக்குழல் நோய்கள், ஆண்மைக் குறைவு உள்ளிட்ட பதிப்புகள் ஏற்படும். தோல்நோய், ஈரல் பாதிப்பு, ஆஸ்துமா என பல கேடுகளுக்கு குப்பை எரிப்பு வழிவகுக்கும். குழந்தைகளும் வயதானவர்களும் அதிகம் பாதிக்கப்படுவார்கள். காற்று மாசுபாடு மட்டுமல்லாமல், எரி உலை சாம்பலும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது ஆகும்.

பெருங்குடி எரி உலையை இப்போது அல்ல, கடந்த 7 ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்த்து வருகிறது. இத்திட்டத்தை கைவிட வேண்டும் என்று பல முறை அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். பெருங்குடி, கொடுங்கையூர் ஆகிய இடங்களில் குப்பை எரி உலை அமைக்கும் திட்டம் குறித்த கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டபோது, அதில் பாட்டாளி மக்கள் கட்சி பங்கேற்று கடுமையாக எதிர்த்தது. தமிழ்நாட்டில் ஆட்சிகள் மாறினாலும், மக்களுக்கு தீங்கு பயக்கும் இத்தகைய திட்டங்களை மட்டும் கைவிடாமல் தொடர்ந்து செயல்படுத்துவது மிகவும் வருத்தமளிக்கிறது. மக்கள் மீது ஆட்சியாளர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதையே இத்தகைய திட்டங்கள் மீண்டும், மீண்டும் நிரூபிக்கின்றன.

மேலை நாடுகளின் மக்கள் குப்பை எரி உலைகளை கடுமையாக எதிர்க்கின்றனர். அமெரிக்க நாட்டில் 1991-ம் ஆண்டில் 187 எரி உலைகள் இருந்தன. ஆனால், இப்போது வெறும் 77 எரி உலைகள் மட்டுமே உள்ளன. கடந்த ஜூன் மாதம் அமெரிக்காவின் 250 நகரங்களின் மேயர்கள் ஒன்று கூடி, தங்களது நகரங்களில் எரி உலை திட்டங்களை அனுமதிக்க மாட்டோம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இந்தியாவில் உருவாகும் குப்பை, எரி உலைகளுக்கு ஏற்றதாக இல்லாததால் லக்னோ, புனே, கான்பூர் உள்ளிட்ட பல இடங்களில் தொடங்கப்பட்ட எரிஉலைகள் தோல்வியடைந்தன. அவை மூடப்பட்டுவிட்டன.

சென்னை மாநகரிலும் குப்பையை எரித்து அதிலிருந்து மின்சாரம் எடுப்பது தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமற்றது ஆகும். சென்னையில் கிடைக்கும் குப்பைகளைக் கொண்டு குப்பை எரிஉலை அமைப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. குப்பையை வகை பிரிப்பது, மக்கும் கழிவுகளை மக்க வைப்பது, கழிவுகளை மறு சுழற்சிக்கு அனுப்புவது ஆகியவைதான் தீர்வு ஆகும். இதை உணர்ந்து பெருங்குடியில் குப்பை எரி உலை அமைக்கும் திட்டத்தை சென்னை மாநகராட்சி கைவிட வேண்டும். இல்லாவிட்டால் மக்களைத் திரட்டி மிகப்பெரிய அளவிலான போராட்டத்தை பா.ம.க. நடத்தும் என்று எச்சரிக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

– துரை. சந்துரு

# சித்த மருத்துவ குறிப்புகள்



மேஜைக் கரண்டி அளவு நெல்லிக் காய்ச் சாறுடன் ஒரு கப் பாகற்காய்ச் சாறும் சேர்த்து தொடர்ந்து தினமும் ஒருவேளை இரண்டு மாதங்களுக்க அருந்தி வந்தால் சர்க்கரை வியாதி ௹ நீரிழிவு நல்லவிதமாகக் கட்டுப்படும்.

நெல்லிக்காய் இலையைக் கொஞ்சம் அரைத்து மோரில் கலந்து சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு சரியாகும்.

காலில் அடிபட்டு வீக்கம் இருந்தால் முருங்கை இலையை அரைத்து ‘வீக்கம்’ மேல் கட்டி ‘பத்து’ போட்டு வந்தால் குணமாகும்.

முருங்கை இலை ஈர்க்கு, கறி வேப்பிலை ஈர்க்கு இரண்டையும் கஷாயம் போட்டு முப்பது மில்லி சாப்பிட்டு வந்தால் வயிற்றின் கிருமிகள் அகன்றுவிடும்.

முருங்கை இலைச் சாற்றைப் பாலில் கலந்து குழந்தைகளுக்குத் தந்தால் அவர்களின் எலும்புகள் வளர்ச்சி அடையும். ரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.

முருங்கைப்பூ, முருங்கைப் பிஞ்சை சாப்பாட்டில் கலந்து சாப்பிட்டால் உடலின் வெப்பம் தணியும். ஆண்மை கூடும்.

முருங்கைப் பூவை தயிரில் ஊற வைத்துச் சாப்பிட்டால் குழந்தை பிறக்க சக்தி கிடைக்கும்.

முருங்கைச் சாறு பத்து மில்லியுடன், வெள்ளரிக்காய் சாறு பத்து மில்லியைக் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் சிறுநீர் எரிச்சல் சரியாகும்.

இஞ்சி சாறைப் பாலில் கலந்து கொடுத்தால் சிறு குழந்தைகள் வயிற்றில் ஏற்படும் அஜீரணக் கோளாறுகள் சரியாகும்.

இஞ்சையை வாயில் வைத்துச் சாறை உறிஞ்சிய பிறகு துப்பி வந்தால் தொண்டைப் புண்கள் சரியாகும்.

இஞ்சி சாறு, வெங்காய சாறு முப்பது மில்லி கலந்து அருந்தினால் ‘வாந்தி’ நின்றுவிடும்.

சீரகத்தை மேஜைக் கரண்டி அளவு எடுத்து வறுத்துப் பொடி செய்து, வாழைப் பழங்களை ‘பஞ்சாமிர்தம்’ ஆக்கி அதனுடன் சீரகப்பொடி சேர்த்து சாப்பிட்டு வந்தால் இரவில் நன்றாகத் தூக்கம் வரும். பித்தம் ஆகலும்.

தேங்காய்ப் பாலுடன் வெண்ணெய் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் ‘வாய்ப்புண்’ குணமாகும்.

தும்பைப் பூக்களை நல்லெண்ணெயில் போட்டு நன்றாகக் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்தால் ‘பீனிசம்’ என்ற தீராத ஜலதோஷம் குணமாகும்.

ஆடாதொடை கஷாயம் ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தும். தூதுவளை இலையை நெய்யில் வதக்கிச் சாப்பிட்டு வந்தாலும் ஆஸ்துமா குணமாகும்.

– K.கலைமணி

# Chandru Law Academy



Gandhi Road, Ambika Street,
(Near David School), Velachery, Chennai - 42.
Tamil Nadu ✆ : 073396 50446

*Conducting*

**COACHING FOR MAGISTRATE / APP / DISTRICT JUDGE EXAMINATIONS**

(All Major and Minor Acts)

## COURSES

1. District Judge
2. Magistrate / Munsif
3. Assistant Public Prosecutor (APP)
4. All India Bar Examination (AIBE)
5. Common Law Admission Test (CLAT)














**Offline Class / நேரடி வகுப்புகள்**

Morning Batch :
Timings : 10.30 am to 1.30 pm
Separate Batches for
Week Days and
Saturday & Sundays

**Online Class / இணைய வழி வகுப்புகள்**

Evening Batch :
Timings : 5 pm to 8.30 pm
Weekly 4 Days
@ ZOOM APP

**@ VELACHERY**
**Chennai.**

**R. CHANDRASEKARAN**
Advocate
**Chandru Law Academy**
Founder & Director

Note : No fees for specially challenged & Third gender person

For Registration Contact **+91 73396 50446 / 90804 48871**

# பாலியல் வன்கொடுமைக்கு



# முதலமைச்சர் பதிலடி!

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பாக பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துள்ளார். தமிழ்நாடு சட்டப்பேரவை 2025, மூன்றாம் நாளான 08.01-2025 அன்று அ.தி.மு.க-வினர் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்பு சட்டை அணிந்து வந்தனர். மேலும், டங்ஸ்டன் தடுப்போம், மேலூரைக் காப்போம் போன்ற வாசகங்கள் அடங்கிய முகக்கவசத்தை அணிந்து வந்திருந்தனர். இதனையடுத்து தொடங்கிய கேள்வி நேரத்தில், பேரவை உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதிலளித்தனர்.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எதிர்கட்சியான அ.தி.மு.க., ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியன கொண்டுவந்தன. தொடர்ந்து இதன் மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகையில,அண்ணா பல்கலை. விவகாரம் ஸ்ரீ முதலமைச்சர் பதில்பல்கலைக்கழகத்தின் பெயரை சொல்லி அண்ணாவுக்கு களங்கம் ஏற்படுத்த விரும்பவில்லை.மாணவிக்கு பாலியல் வன்கொடுமை ஸ்ரீ மாபெரும் கொடூரம்அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது மாபெரும் கொடூரம். இந்த விவகாரத்தில் உண்மையான அக்கறையோடு பல உறுப்பினர்கள் பேசியுள்ளனர். இதை பயன்படுத்தி ஆட்சி மீது தவறான எண்ணத்தை உருவாக்க சில உறுப்பினர்கள் முயற்சி செய்கின்றனர்.

மாணவிக்கு நீதி பெற்றுத்தருவதை தவிர வேறு எந்த நோக்கமும் இல்லைஇந்த ஆட்சி மீது தவறான எண்ணத்தை ஏற்படுத்த ஒரு உறுப்பினர் பேசியுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி பெற்றுத் தருவதை தவிர வேறு எந்த நோக்கமும் அரசுக்கு இல்லை. சட்டப்படி நியாயம் பெற்றுத்தருவதைவிட தமிழ்நாடு அரசுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை.அரசியல் ஆதாயத்துக்காக அரசை குறை கூறுவதா?

குற்றவாளியை கைது செய்யாமல் விட்டிருந்தால் காப்பாற்ற முயற்சி செய்திருந்தால் அரசை நீங்கள் குறை சொல்லலாம். குற்றம் தொடர்பான ஆதாரங்களை எல்லாம் திரட்டிய பிறகும் அரசை குறை கூறுவது அரசியல் ஆதாயத்துக்காக மட்டுமே. வழக்கு பதிந்த மறுநாளிலேயே குற்றவாளி கைது

வழக்கு பதிவு செய்யப்பட்ட மறுநாள் காலையிலேயே குற்றவாளி ஞானசேகரன் கைது

செய்யப்பட்டார். மாணவி தொடர்பான முதல் தகவல் அறிக்கை கசிந்ததற்கு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள என்.ஐ.சி.யே காரணம். அண்ணா பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு இல்லை, சிசிடிவி கேமராக்கள் இல்லை என சொல்வதில் உண்மையில்லை. தொழில்நுட்ப கோளாறு காரணமாக எப்ஐஆர் வெளியானதை என்ஐசி ஒப்புக்கொண்டது. சிசிடிவி கேமராவில் பதிவான காட்சியைக் கொண்டே குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட குற்றவாளி குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

யாராக இருந்தாலும் நடவடிக்கை நிச்சயம்மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் வேறு யாருக்கு தொடர்பு இருந்தாலும் அவர் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்படுவார்.யார் அந்த சார்? ரூ ஆதாரம் இருந்தால் கொடுக்கலாம்யார் அந்த சார் என்று பேசும் எதிர்க்கட்சிகள் அது தொடர்பாக ஆதாரம் இருந்தால் சிறப்பு புலனாய்வு குழுவிடம் ஒப்படைக்கலாம்.பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ரூ இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும்பெண்களுக்கு எதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு திமுக அரசு அடக்கும்.

60 நாட்களில் குற்றப்பத்திரிகை தாக்கல்மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் 60 நாளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் யாராக இருந்தாலும் தயவு தாட்சணியம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும். வீண் விளம்பரம், குறுகிய லாபத்துக்காக மலிவான அரசியலை மீண்டும் மீண்டும் செய்கின்றனர். எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு எடுபடாது

எடுபடாதுவீண் அரசியல் லாபத்துக்காக வதந்திகளை பரப்ப வேண்டாம்; இந்த சதி மக்கள் மத்தியில் எடுபடாது. பெண்கள் பாதுகாப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறோம் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

பெண்கள் பாதுகாப்புக்காக நடவடிக்கை எடுத்துவரும் அரசை பாராட்ட மனமில்லை என்றாலும் பரவாயில்லை; வீண் பழி சுமத்தாமல் இருந்தால் போதும். தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக உள்ளது. வீண் அரசியலை தவிர்த்தாலே பெண்கள் பாதுகாப்பு உறுதியாகும். வீண் அரசியலை தவிர்த்தாலே பெண்கள் பாதுகாப்பு பிரச்சனைக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று ஐகோர்ட்டே கூறியுள்ளது. இந்தியாவில் பெண்களுக்கு பாதுகாப்பான முதல் 10 நகரங்களில் சென்னை, கோவை உள்ளது. தமிழ்நாட்டில்தான் அதிக பெண்கள் வேலைக்கு செல்கிறார்கள்.அதிமுக ஆட்சியில் பொள்ளாச்சியில் நடந்தது என்ன?


மனசாட்சி இன்றி பெண்களின் பாதுகாவலர்கள் போல் பேசுகிறவர்கள் பொள்ளாச்சியில் என்ன நடந்தது என நினைத்துப்பாருங்கள்.கடந்த அதிமுக ஆட்சியில் பொள்ளாச்சியில் என்ன நடந்தது என்று யோசித்து பாருங்கள்?. பொள்ளாச்சி சம்பவத்தில் அதிமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிபிஐ விசாரணைக்கு பிறகே பொள்ளாச்சி விவகாரத்தில் பல உண்மைகள் வெளியாகின. பொள்ளாச்சி சம்பவத்தில் தொடர்ச்சியாக பல பெண்களுக்கு 2 ஆண்டுகளாக பாலியல் வன்கொடுமை நடந்தது. பொள்ளாச்சி சம்பவம்தான் அன்றைய முதல்வர் “சார்” ஆட்சியின் சட்டம் ஒழுங்கின் லட்சணம். பொள்ளாச்சி விவகாரத்தில் முக்கிய குற்றவாளியான திருநாவுக்கரசை கைதுசெய்யாமலே வழக்கை முடிக்க முயற்சி நடந்தது. சிபிஐ விசாரணை-யில்தான் பொள்ளாச்சி சம்பவம் முழுவதும் அதிமுக பிரமுகர்களால் நடந்தது தெரியவந்தது.

முதலமைச்சரை பேச விடாமல் அதிமுகவினர் அமளிசட்டப்பேரவையில் முதலமைச்சரை பேச விடாமல் அதிமுகவினர் ஈடுபட்டுள்ளனர். பொள்ளாச்சி விவகாரத்தை சுட்டிக்காட்டி முதலமைச்சர் பேசியபோது அதிமுகவினர் அமளி. முதலமைச்சர் பதில் சொல்வதை உங்களால் கேட்க முடியவில்லையா? என அதிமுகவினருக்கு பேரவை தலைவர் கேள்வி எழுப்பினார்.

அதிமுகவினரை பார்த்து 100 சார் கேள்விகளை கேட்க முடியும் பொல்லாத ஆட்சிக்கு சாட்சியே பொள்ளாச்சிதான் என முதலமைச்சர் தெரிவித்தார். பொள்ளாச்சி விவகாரத்தில் குற்றவாளிகளை காப்பாற்ற அதிமுக அரசு முயன்றது சிபிஐ விசாரணையில் அம்பலமானது. பெண்களுக்கு எதிரான ஆட்சி நடத்திய “சார்”கள் எல்லாம் பேட்ஜ் அணிந்து வந்து அமர்ந்துள்ளனர். அதிமுகவினரை பார்த்து 100 சார் கேள்விகளை கேட்க முடியும் இவ்வாறு தெரிவித்தார்.

– K.ரமேஷ்குமார்

# எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை!
# மரு. ராமதாஸ்



பாமகவில் இளைஞரணித் தலைவர் நியமனம் தொடர்பாக ராமதாஸ் - அன்புமணி இடையே பகிரங்கமாக மோதல் ஏற்பட்ட நிலையில், பிரச்னை பேசித் தீர்க்கப்பட்டுவிட்டதாக ராதாஸ் கூறியுள்ளார். கடந்த 29.12.2024அன்று தைலாபுரம் தோட்டத்தில் ராமதாசுடனான ஆலோசனைக்குப் பிறகு அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார்.

அப்போது அவர், கட்சியின் வளர்ச்சி பற்றியும் சட்டமன்றத் தேர்தலைப் பற்றியும் சித்திரை முழுநிலவு மாநாட்டை நடத்துவது குறித்தும் மருத்துவர் ராமதாசுடன் குழுவாக விவாதித்ததாக கூறினார்.

பொதுக்குழுவில் நடந்த மோதல் குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது, "எங்கள் கட்சி ஜனநாயகக் கட்சி. பொதுக்குழுவில் காரசாரமாக விவாதம் நடப்பது இயல்புதான்" எனக் கூறினார்.

முகுந்தன் பரசுராமன் நியமனம் குறித்த கேள்விக்குப் பதில் அளித்த அன்புமணி, "உள்கட்சி விவகாரத்தைப் பற்றி நீங்கள் பேசுவதற்கு எதுவும் இல்லை" என்று மட்டும் பதில் அளித்தார்.

**"பேசி சரிசெய்துவிட்டோம்" - ராமதாஸ்**

ஆனால், தனக்கும் அன்புமணிக்கும் இடை-யிலான மோதல் பேசி தீர்க்கப்பட்டுவிட்டதாக 02.01.2025 அன்று செய்தியாளர் சந்திப்பில் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் பேசும் போது, "எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் எதுவும் இல்லை. பொதுக்குழுவுக்கு எந்தக் கட்சியும் ஊடகங்களை அனுமதிப்பதில்லை. அது எங்கள் கட்சி விவகாரம். அதைப் பேசி சரிசெய்துவிட்டோம். இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தனை பொதுக்குழுவில் அறிவித்தோம். அவருக்கு நியமன கடிதத்தையும் கொடுத்துவிட்டேன்" என்றார்.

"அன்புமணி உடனான மோதல், கட்சியின் வளர்ச்சியை பாதிக்குமா?" என செய்தியாளர்கள் கேட்ட போது, "கட்சி வளர்ச்சியை பாதிக்காது. என் தவறுகளை விமர்சியுங்கள் என்றுதான் கட்சி நிர்வாகிகளிடம் கூறுவேன். அதைச் சொன்னால்தான் திருத்திக் கொள்ள முடியும்" என்றார்.

"அரசியல் கட்சியின் தலைவரோ, நிறுவனரோ எந்தப் பொறுப்பில் இருந்தாலும் ஊடகங்களிடம்

கோபத்தை வெளிப்படுத்தக் கூடாது” எனவும் ராமதாஸ் குறிப்பிட்டார்.

**அன்புமணி ஆலோசனை**

கடந்த சில நாட்களாக செங்கல்பட்டு மாவட்டம் பனையூரில் உள்ள தனது அலுவலகத்தில் பாமக நிர்வாகிகளை அன்புமணி சந்தித்துப் பேசி வருகிறார்.

வெள்ளிக்கிழமை 03.01.2025 அன்று கள்ளக்குறிச்சி, கடலூர், விழுப்புரம், தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களின் செயலாளர்களுடன் அன்புமணி ஆலோசனை நடத்தினார்.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக பாமகவை வலுப்படுத்தும் வகையில் மாவட்ட செயலாளர்களுடன் அன்புமணி ராமதாஸ் கூட்டம் நடத்தி வருவதாக, அக்கட்சியின் நிர்வாகிகள் கூறுகின்றனர்.

**பாமக-வினர் சொல்வது என்ன?**

“கட்சிக்குள் எந்தப் பிரச்னையும் இல்லை. இதை ஊடகங்கள்தான் பெரிதுபடுத்துகின்றன. பாமகவில் நிறுவனத் தலைவரும் (ராமதாஸ்) கட்சியின் தலைவரும் (அன்புமணி) கூறுவதுதான் முடிவு. இருவரையும் ஒரே முகமாகவே பார்க்கிறோம். இதில் எந்தவிதமான ஒளிவுமறைவும் இல்லை.

எங்கள் கட்சியில் உச்சக்கட்ட அதிகாரம் என்பது மருத்துவரிடம் (ராமதாஸ்) உள்ளது. அவருக்கு அடுத்து தலைவருக்கு (அன்புமணி) அதிகாரம் இருக்கிறது எனக் கூறுகின்றனர்.

அன்புமணி பாமக மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி வருவது குறித்த கேள்விக்கு, “மருத்துவர் (ராமதாஸ்) சொல்லித்தான் கூட்டங்களை நடத்துகிறார்” என்று என்கிறார்கள்.

- ந.மதிவாணன்

# தொடர் நடவடிக்கைகளால் போதை பொருள் கடத்தல் சங்கிலியை தடுத்துள்ளோம்: டிஜிபி சங்கர் ஜிவால்

“போதை மற்றும் புகையிலைப் பொருட்கள் புழக்கத்தை முற்றிலும் ஒழிக்க 2022 ஆக. 10-ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தலைமையில் மாநில அளவிலான மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது. இதில், புதிய உக்திகள் வகுக்கப்பட்டன. 2023-ல் 10,256 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 14,770 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 23,364 கிலோ கஞ்சா, 0.953 கிலோ ஹெராயின், 39,910 போதை மாத்திரைகள் மற்றும் 1,239 கிலோ மற்ற போதைப் பொருட்கள் (கஞ்சா சாக்லேட், மெத்தம்பெட்டமைன், ஆம்பிடாமைன் மற்றும் மெத்தாகுலான்) ஆகியவை கைப்பற்றப்பட்டன. நடப்பாண்டு ஆகஸ்ட் வரை 6,054 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 9,731 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப் பொருட்கள் விற்பனை செய்வோரின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

மேலும், போதைப் பழக்கத்துக்கு எதிராக இளைஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்து



கிறோம். தொடர் நடவடிக்கையால் தமிழகத்தில் கஞ்சா பயிரிடுவது முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் கடத்தல் சங்கிலியை தடுத்துள்ளோம்“ என்று கூறினார்.

- M.ஜெயராஜ்

# முருகப்பெருமானின் 16 வகை கோலங்கள்



முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். முருகப்பெருமானின் 16 வகையான திருக்கோலங்களை பற்றி விரிவாக பார்க்கலாம்.

1. **ஞானசக்திதரர்:** திருத்தணியில் எழுந்தருளி இருக்கும் முருகனின் திருக்கோலம், 'ஞானசக்திதரர்' வடிவமாகும். இந்த முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும்.

2. **கந்தசாமி:** பழனி மலை மீது இருந்து அருளும் பாலதண்டாயுதபாணியின் திருவடிவம் 'கந்தசாமி' வடிவமாகும். இந்த உருவத்தை வழிபட்டு வேண்டிக்கொண்டால், சகல காரியங்களும் சித்தியாகும்.

3. **ஆறுமுக தேவசேனாபதி:** சென்னிமலை முருகப்பெருமான் ஆலயத்தின் கர்ப்பக் கிரக மாடம் ஒன்றில் 'ஆறுமுக தேவசேனாபதி' வடிவத்தை தரிசிக்க முடியும். இவரை வழிபட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும்.

4. **சுப்பிரமணியர்:** நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருவிடை கழியில் உள்ள முருகப்பெருமான் ஆலயத்தில் அருளும் மூலவர் 'சுப்பிரமணியர்' ஆவார். இவர்,

தன்னை வழிபடும் பக்தர் களின் வினைகளை நீக்கி ஆனந்தத்தை அளிக்கக் கூடியவர்.

5. **கஜவாகனர்:** திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோவில் கீழைக் கோபுரத்தில், யானை மீது இருக்கும் முருகப்பெருமானை தரிசிக்கலாம். இவரை 'கஜவாகனர்' என் கிறார்கள். இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகி ஓடும்.

6. **சரவணபவர்:** சென்னிமலை மற்றும் திருப்போரூர் திருத் தலங்களில் 'சரவணபவர்' திருவுருவை காணலாம். இந்த வடிவத்தில் அருளும் முருகப்பெருமான், தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர்.

7. **கார்த்திகேயர்:** கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோவிலிலும், தாராசுரம் ஐராவதீஸ்வரர் ஆலயத்திலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது. இவரை வழிபட்டால் சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். இவரை வழிபட்டால் சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரை வழிபடுவது விசேஷமான பலனைத் தரும்.

8. **குமாரசாமி:** கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவன் கோவிலில், இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக்கிறது. இவரை வழிபட்டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலிலும் இந்த திருவுருவை தரிசிக்க முடியும்.

9. **சண்முகர்:** திருச்செந்தூரில் உள்ள முருகன் அருட்கோலம் சண்முகர் திருவடிவமாகும். இவரை வழிபட்டால் சிவன்- சக்தியை வழிபட்ட பலன் கிடைக்கும்.

10. **தாரகாரி:** `தாரகாசுரன்' என்னும் அசுரனை அழித்ததால் முருகப்பெருமான் இந்தத் திருநாமத்தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழிசெய்யும் திருக்கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோவிலில் தாரகாரி அருள்கிறார்.

11. **சேனானி:** தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது. இவரை வழிபட்டால் பகை அழியும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பொறாமை நீங்கும்.

12. **பிரம்மசாஸ்தா:** காஞ்சீபுரத்தில் உள்ள குமரக்கோட்டம், ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது. இவரை வழிபட்டால் எல்லா வகை செயல்களிலும் தேர்ச்சி பெறலாம். கல்வியில் வெற்றி கிட்டும்.

13. **வள்ளிகல்யாணசுந்தரர்:** திருப்போரூர் முருகன் கோவில் தூண் ஒன்றில் இவரது திருவுருவம் இருக்கிறது. இவரை வழிபட்டால் திருமணத்தடைகள் விரைவில் அகலும்.

14. **பாலசுவாமி:** திருச்செந்தூர், திருக்கண்டியூர், ஆண்டாள் குப்பம் ஆகிய தலங்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது. இவர், அங்கக் குறைபாடுகளை அகற்றுபவராக இருக்கிறார். மேலும் நீண்டநாள் நோய் விலகும்.

15. **சிரவுபஞ்சபேதனர்:** திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளிபள்ளி ஆகிய இடங்களில் இவரது திருவுருவம் உள்ளன. இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும்.

16. **சிகிவாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமைந்திருக்கும் திருவடிவம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர் இவர்.

- அன்புமணி

# அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு மாதம் ஆங்கில பயிற்சி: பள்ளிக் கல்வித் துறை தகவல்

தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எளிய முறையில் ஆங்கில பாடம் கற்பித்தல் தொடர்பாக பெங்களூரில் ஒரு மாத பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து தொடக்கக் கல்வித் துறை இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் சார்பிலும் ஆசிரியர்களுக்கு திறன்சார் பயிற்சி அளிக்கப்படுகின்றன. அதன்படி அரசு தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு பெங்களூருவில் உள்ள தென்னிந்திய மண்டல ஆங்கில மொழி பயிற்சி நிறுவனம் மூலம் ஆங்கிலம் கற்பித்தல் குறித்த பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்த பயிற்சி முகாம் ஜனவரி 16 முதல் பிப்ரவரி 14-ம் தேதி வரை நடைபெறும். இதில்




ஏற்கெனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தவிர்த்து, விருப்பமுள்ள ஆசிரியர்களை கண்டறிந்து பங்கேற்கச் செய்ய வேண்டும். ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்போது உரிய விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் அனைத்து விவரங்களும் அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கையொப்பமிட்டு ஜனவரி 7-ம் தேதிக்குள் மின்னஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும், என்று அதில் கூறப்பட்டுள்ளது. - D.பாமா


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: info@penakural.com, Web: www.penakural.com**

UPI Number:
8754582123

# TAMILNI PRINTZ & GRAPHICS

**ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS**

DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION

DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER



## WEBSITE DESIGN SERVICE



APPLY
PAN CARD
PASSPORT

ALL ONLINE SERVICE



DESIGN
MAGAZINE
NEWSPAPER

ADDRESS: 3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com

PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - January 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S**

